₹100/-

3 - 12

ஞானகுரு

# மகிழ்ச்சி

மார்கழி 2024

எஸ்.கே.முருகன்



## புதிய கடவுள்?

Online
கவுன்சிலிங்
WhatsApp Call Only



Talk Therapy

கணவன், மனைவி, குழந்தைகள் உறவுச் சிக்கல்களுக்குத் தீர்வு

45 நிமிடங்களுக்கு 500 ரூபாய்

மனவள ஆலோசகர்
எஸ்.கே.முருகன்
ஜிஜி ரிலேசன்ஷிப் கவுன்சிலிங்.
முன்பதிவுக்கு :
+91 80725 89355



ஆசிரியர் பக்கம்

# காலில் விழுவதும் தீண்டாமை



பெரியவர்கள் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கும் பழக்கம் நிறைய குடும்பங்களில் உள்ளது. தாங்கள் பார்த்து பிரமிக்கும் நபர், அரசியல் தலைவர்கள், பெரிய அதிகாரிகள் காலில் விழுந்து ஆசி வாங்குவதை பெருமையாகப் பார்க்கிறார்கள்.

சில மேடைகளில் இந்த கலாச்சாரத்தை நீங்கள் பார்த்திருக்கலாம். சிறப்பு விருந்தினர் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கிக்கொண்டிருப்பார். இடையில் யாரேனும் ஒரு மாணவர் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்குவார். அதையடுத்து வரும் மாணவர்களுக்கும் அந்த அழுத்தம் விழுந்துவிடும். எனவே வரிசையாக எல்லோரும் காலைத் தொட்டுவிட்டு பரிசு வாங்கும் நிலைக்கு ஆளாவார்கள். அப்போது யாராவது ஒரு மாணவர், அதனை தவிர்ப்பது பெரும் குற்றமாகப் பார்க்கப்படுகிறது.

சில வீடுகளில் இதனை பாரம்பரியமாக கடைப்பிடிக்கிறார்கள். விஷேச தினங்களில் பெரியோர்களின் ஆசிர்வாதம் முக்கியம் என்று சொல்லித்தரப்படுகிறது. இதை எங்க சந்தோஷத்துக்குச் செய்கிறோம், மதிப்பையும் அன்பையும் இப்படி காட்டுவதில் தவறு இல்லை என்கிறார்கள்.

எனவே காலில் விழுவது அடிமைத்தனத்தின் மிச்சமா அல்லது கலாச்சாரமா என்ற குழப்பம் நிறைய பேருக்கு இருக்கிறது.

எந்தவொரு மனிதரும் இன்னொரு மனிதரை விட உயர்ந்தவர் இல்லை, தாழ்ந்தவரும் இல்லை. காலில் விழுவது பழக்கமே தவிர கலாச்சாரம் கிடையாது. எவருடைய ஆசிர்வாதமும் யாரையும் வாழ வைக்காது, யாருடைய சாபமும் எவரையும் காயப்படுத்த முடியாது.

ஒரு மனிதரை தொடுவதற்குத் தகுதியில்லாத நபர் என்று தள்ளி வைப்பது மட்டும் குற்றம் அல்ல, ஒருவரை மிகவும் தகுதியுள்ள நபராக உயர்த்திக் காட்டுவதும் தீண்டாமையின் மறுபக்கமே. ஆகவே, பிறர் பார்க்கும் நேரத்தில் ஒருவர் காலில் விழாதீர்கள். தனி நபராக இந்த பழக்கத்தை பொது இடத்தில் தொடங்கி வைக்காதீர்கள்.

மதிப்பு கொடுப்பது என்றால் தனிமையில் கொடுங்கள். அதுவே மகிழ்ச்சி.

ஆசிரியர்

www.gyaanaguru.com

## காதலுக்காக காதல் தியாகம்

### மகிழ்ச்சி தரும் க்ளைமாக்ஸ்

# காதலுக்கு மரியாதை


இந்த உலகில் இதுவரை வெளியான பெரும் பான்மை திரைப்படங்களுக்கு காதல் என்பது தான் மையக்கரு. பழி வாங்கும் கதை, பேய், திரில்லர், சயின்ஸ்ஃபிக்ஷன் வகையறா என்றாலும் அதற்குள் எப்படியாவது ஒரு காதலைப் புகுத்திவிடுவார்கள். ஏனென்றால் மனிதர்கள் அத்தனை பேரும் காதல் அடிமைகள்.

எல்லா படங்களிலும் காதல் இருக்கிறது என்றாலும், இதுவரை சொல்லப்படாத காதல் க்ளைமாக்ஸ் என்ற வகையில், பார்த்த அத்தனை பேரையும் ரசிக்க வைத்த திரைப்படம், காதலுக்கு மரியாதை.

காதலுக்காக உயிர் கொடுத்தவர்கள், காதலுக்காக உயிர் எடுத்தவர்கள், காதலுக்காக சேர்ந்தே செத்தவர்கள், காதலுக்காக ஓடிப்போனவர்கள், காதலுக்காக பைத்தியம் ஆனவர்கள் என்றெல்லாம் பார்த்த ரசிகர்களுக்கு, முதன் முதலாக காதலுக்காக காதலை தியாகம் செய்த ஜோடியாக ஜீவா - மினியை அறிமுகம் செய்திருக்கிறார் ஃபாசில்.

காதலர்கள் ஒன்று சேர்வார்கள் என்பதை படத்தின் டைட்டிலே சொல்லிவிடுகிறது. ஆனால், இப்படியொரு க்ளைமாக்ஸ் காட்சியை யோசிக்கவும், உள்ளத்தை அள்ளும் வகையில் படமாக்கவும் ஃபாசிலால் மட்டுமே முடியும். எத்தனை முறை பார்த்தாலும் நெஞ்சைத் தொடும் க்ளைமாக்ஸ் காட்சியைப் பார்க்கும் முன்பு, கதையை அவுட்லைன் பார்த்துவிடலாம்.

துப்பாக்கியை கையில் எடுக்காத நடிகர் விஜய்யின் ஆரம்ப காலத் திரைப்படம் என்பதால் நம் பக்கத்து வீட்டுப் பையனைப் போலவே இருப்பார். ஒரு புத்தகக் கடையில் ஷாலினியை சந்திக்கிறார். முதல் சந்திப்பு உயிரை உரசுகிறது. ஷாலினியின் கண்களைப் பார்த்து விஜய் மட்டுமல்ல, அத்தனை ரசிகர்களும் மயங்கத்தான் வேண்டும். கண்களால் மட்டுமே பேசிக்கொண்டிருக்கும் ஷாலினியிடம், “நீ என் மனசுல பெரிய சுமையா இருக்குற. உன்ன பார்த்த நொடியில இருந்தே என் மனசு குத்திக்கிட்டே இருக்கு. நீ விரும்புறனு சொன்னா அந்த வேதனை போய்டும். நீ விரும்பலனு சொன்னா கூட போய்டும். நீ என்ன விரும்புறனு முடிவு பண்ணிடலாமா? விரும்புறியா இல்லையானு” என்று



கவித்துவமாகக் கேட்டு சம்மதம் வாங்குகிறார்.

தங்கையிடம் வம்பு செய்கிறார் என்று ஷாலினியின் மூன்று அண்ணன்களும் விஜய்யை அடிக்கிறார்கள். விஜய்யின் தந்தை சிவகுமாரும் இதனால் கோபமாகிறார். கோபத்தில் இருக்கும் குடும்பத்தினர் காதலுக்கு சம்மதம் தர மாட்டார்கள் என்ற எண்ணத்தில் விஜய்யும் ஷாலினியும் நண்பர் சார்லியின் வளர்ப்புத் தந்தையிடம் சரண் அடைகிறார்கள். இவர்களுக்குத் திருமணம் செய்துவைக்கும் பணியில் மணிவண்ணன் தீவிரமாகிறார். இந்த நேரத்தில் காதலர்கள் இருவருக்கும் ஏதோ தவறு செய்வதாக உள்ளுணர்வு கூறுகிறது. இத்தனை நாட்களாக பாசம் காட்டி வளர்த்த பெற்றோர்களை காதலுக்காக உதறித்தள்ளுவது சரியா என்ற யோசனை வருகிறது. அதனால் இவரும் ஒருவரை யொருவர் பிரியும் முடிவுக்கு வருகிறார்கள்.

இந்த பிரிவுக்கு அர்த்தம் புரியாமல் மணிவண்ணன் விழிக்கிறார். அப்போது ஷாலினி, "ஜீவாவ நான் விட்டுக்கொடுக்குறேன், அவங்க பெத்தவங்களுக்காக. ஜீவா என்னை தாரை வாக்கறாரு, என் குடும்பத்திற்காக.." என்று கண்கள் நிறைய காதலும் கண்ணீருமாகச் சொல்வார். இதனை ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் கட்டாயப்படுத்தவும் முடியாமல் அவர்களை வழியனுப்பி வைக்கிறார் மணிவண்ணன்.

இருவரும் அவரவர் வீட்டுக்குத் திரும்புகிறார்கள். இரண்டு குடும்பமும் தங்கள் பிள்ளையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஷாலினிக்கு திருமணம் நிச்சயம் செய்யப்பட்ட தகவல் கிடைக்கிறது. திருமணத்திற்கு முன்பாக ஷாலினியின் செயினை திருப்பிக் கொடுத்துவிட நினைக்கிறார் விஜய். இங்கு தான் க்ளைமாக்ஸ் காட்சி ஆரம்பாகிறது.

மினியின் வீட்டு போர்டிகோவில் காரில் இருந்து இறங்குகிறார் சிவகுமார். அவருக்குப் பின் அம்மா ஸ்ரீவித்யா, விஜய், நண்பர்கள் இறங்குகிறார்கள். இவர்களைப் பார்த்தவுடன் குழப்பமும் கோபமும் ஷாலினி அண்ணன்களுக்கு வருகிறது. நிலைமையைப் புரிந்து கொண்ட சிவகுமார் வாசலில் இருந்தபடியே, "உங்க பொண்ணு செயின் என் பையன்கிட்டே இருக்கு. அதைக் கொடுத்துட்டு மன்னிப்புக் கேட்டுக்கத் தான் வந்தோம்"" என்றதுமே வீட்டின் நிலைமை சட்டென தளர்வடைகிறது.

"நாங்களும் நடந்ததுக்கு மன்னிப்பு கேட்க நினைச்சோம்...'' என்று உள்ளே அழைக்கிறார்கள்.

## மந்திரச்சொல்

சின்ன
அலட்சியம்
மிகப்பெரும்
தண்டனை
கொடுத்து
விடும். ”

இனி, வாழ்க்கையில் பார்க்கவே முடியாதோ என்று நினைத்த காதலன் வீடு தேடி வந்திருப்பதை அறிந்ததும் ஷாலினியின் கண்களும் உடலும் பரபரக்கிறது. உடல் நடுங்குகிறது. ஷாலினியின் அம்மா லலிதா, ''உங்க பையனை நான் பார்த்ததில்லை" என்றதும் விஜய் அவர் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்குகிறான். அதோடு, ''உங்க பொண்ணு மினி எந்தத் தப்பும் செய்யல, நான் தான்'' என்று தன்னை மட்டும் குற்றவாளியாக காட்டிக் கொள்கிறான். அனைவருக்கும் ஷாலினி குடிப்பதற்குப் பால் கொடுக்கிறாள். ஷாலினியை முதன்முதலாகப் பார்க்கும் சிவகுமாரும் ஸ்ரீவித்யாவும் தர்மசங்கடத்துடன் தவிக்கிறார்கள்.

யாருக்கும் அடுத்து என்ன பேசுவது என்று தெரியாமல் போகவே, "கிளம்புகிறோம்" என்கிறார் சிவகுமார். அனைவரும் எழுகிறார்கள். இங்கு தான் ஃபாசில் உள்ளத்தைத் தொடும் ஒரு டயலாக் வைக்கிறார். ''இத்தனை தூரம் வந்துட்டு கல்யாணப் பொண்ணை ஆசிர்வாதம் பண்ணாமப் போறீங் களே..." என்று ஷாலினியின் அம்மா லலிதா ஆற்றாமையுடன் கேட்கிறார். ஏற்கெனவே அழுதுவிடும் நிலையில் இருக்கும் ஸ்ரீவித்யா கண்கள் கலங்க ஷாலினியைப் பார்க்கிறார். ஆசிர்வாதம் பண்ண முடியாமல் விம்மலை அடக்கிக்கொண்டு, "என்ன சொல்லிம்மா ஆசிர்வாதம் பண்ணச் சொல்றீங்க.






இவ எங்க வீட்டு மருமக.. இவளை என்கிட்டே குடுத்துடுங்க. நாங்க கண்ணுக்குள்ளே வச்சுப் பார்த்துக்கிடுறோம்" என்று கதறி அழுகிறாள்.

அதைக் கேட்டு ஒட்டுமொத்த குடும்பமும் அதிர்கிறது. சிவகுமார் மிகுந்த தயக்கத்துடன், "என்னம்மா..." என்று கேட்க, "என்னால இவளை விட நல்ல பொண்ணு பார்க்க முடியாதுங்க" என்கிறார். யாரும் எதுவும் பேச முடியாமல் தவிக்கும் நேரத்தில் அம்மா லலிதாவே அடுத்த அடியும் எடுத்துக் கொடுக்கிறார். ''கூட்டிட்டுப் போங்க. யார் வேணாம்னு சொன்னா. அவளோட ஜீவாவை அவகிட்டே குடுத்துடுங்க'' என்று விட்டுக்கொடுக்கிறார்.

அம்மா சொன்னதன் முழு அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாத அண்ணன்கள், "அம்மா... நீங்க என்ன சொல்றீங்க..?" என்று தடுமாற, "டேய்... அவ உள்ளுக்குள்ள ஜீவாவை வைச்சிக்கிட்டு நமக்காக சிரிச்சிக்கிட்டு நடிக்கிறா... அவ எத்தனை வேதனையில இருக்கான்னு எனக்குத் தான் தெரியும்... அவளை அவளோட ஜீவாகிட்டே குடுத்துடுங்கடா...'' என்கிறார். அம்மாவின் பேச்சைக் கேட்டதும் ஷாலினி கண்கள் கலங்க அம்மாவைக் கட்டிக்கொள்கிறாள். விஜய் கண்கள் கலங்குகிறது. அண்ணன்களும் சம்மதத்துடன் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள்.

இவர்கள் எப்படியாவது ஒன்று சேர வேண்டும் என்று எதிர்பார்த்து காத்திருக்கும் ஒவ்வொரு ரசிகரும் இந்த திருப்பத்தைக் கண்டு கண் கலங்குகிறார்கள். அடுத்து நடப்பது வழக்கமான ஒன்று கூடல். ஆனால், இந்த 10 நிமிடத்தில் இளையராஜாவின் இசை நம்மை அழவைக்கிறது, ஆனந்தப்பட வைக்கிறது. ஒரு காதலை பெற்றோரை விட அதுவும் ஒரு தாயை விட வேறு யாராலும் நன்றாகப் புரிந்துகொள்ள முடியாது என்பதை சொன்ன படம் காதலுக்கு மரியாதை.

மீண்டும் ஒரு முறை இந்த படத்தின் க்ளைமாக்ஸ் காட்சியை மட்டும் பாருங்கள். ஷாலினியும் ஸ்ரீவித்யாவும் உங்கள் கண்களில் கண்ணீர் வரவழைப்பார்கள். இது தான் உசுரை உருக்கும் க்ளைமாக்ஸ். மீண்டும் ஒரு நல்ல க்ளைமாக்ஸ் காட்சியுடன் சந்திப்போம்.

www.gyaanaguru.com
www.gyaanaguru.com

# அன்னபூரணி

## புதிய கடவுள்?



கைலாசா எனும் கற்பனை நாட்டில் இருக்கும் நித்தியானந்தா இப்போதும் சிவன், திருப்பதி, திருமால் என்று பல்வேறு வேடம் போட்டு தன்னையே கடவுள் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார். ஜக்கி வாசுதேவ், ரவிசங்கர், ராம்தேவ் என்று ஒரு கும்பல் அரசியல்வாதிகளை வளைத்துப் போட்டு ஆன்மிக வியாபாரம் செய்து வருகிறார்கள்.

மேல்மருவத்தூர் அம்மாவாக காட்சியளித்த பங்காரு அடிகளார் இறந்துபோனதும், அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு புதிய அம்மாவாக அவதாரம் எடுத்திருக்கிறார் அன்னபூரணி. அகிலத்தை ஆளும் ஆதிபராசக்தியின் அவதாரமே' என்று அன்னபூரணி அரசு அம்மாவை பக்தர்கள் வழிபட்டு கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்கள்.

### ரிஷிமூலம்

அதுசரி, யார் இந்த அன்னபூரணி..? இவர் எப்படி சாமியார் ஆனார்..?

'இறை சக்தி மனித உருவத்தில் தான் வரும். நிறைய பிரச்னைகளை கொடுத்து தான், இறை சக்தியாக இருக்கிறேன் என்பதை உணர வைக்கும். அப்படி தான், என் வாழ்க்கையில் நடந்தது என்கிறார் அன்னபூரணி. மேலும் அவர், ".நான் பிறந்த ஊர் சிவகங்கை மாவட்டம் நாட்டரசன் கோட்டை. பழனியப்பன் - சீதை தம்பதிகளுக்கு 4வது பெண் குழந்தையாக பிறந்தேன். ஆசிரியர் பயிற்சி முடித்திருக்கிறேன். சிறுவயதில் எல்லாரையும்

**கவர் ஸ்டோரி**


www.gyaanaguru.com

> **2016ல் என் கணவர் அரசுக்கு தீட்சை பெற்று ஆன்மிக வழியில் சென்றார். என் கணவருக்கு நிறைய பக்தர்கள் உருவானார்கள். திடீரென 2019ல் அரசு இறந்தார். என்னால் அந்த கஷ்டத்தை, துயரத்தை தாங்கிக்கொள்ள முடியவில்லை.**

மாதிரி ஜாலியா படிப்பு, விளையாட்டு என இருந்தேன். 19 வயதிலேயே எனக்கு திருமணம் பண்ணி வெச்சிட்டாங்க. அதன் பின் சென்னை வந்துவிட்டேன். அந்த வாழ்க்கை சரியில்லாத வாழ்க்கை. நிறைய பிரச்னை. என் பெற்றோரிடம் சூழ்நிலையை சொன்னேன். அப்போது பெற்றோர் பெண் குழந்தைகளுக்கு ஆதரவு தரமாட்டார்கள். என்ன பிரச்னை ஆனாலும் கணவர் வீட்டில் தான் இருக்க வேண்டும் என்று கூறுவார்கள்.

இப்படி நிறைய பிரச்னைகளை கடந்து என் வாழ்க்கை போகும் போது, 2009ல் நானும் அரசுவும் சந்திக்கும் சூழ்நிலை வந்தது. நாங்கள் இருவரும் பூர்வஜென்ம பந்தத்தை உணர்ந்தோம். எங்கள் இருவரையும் ஏதோ ஒரு அன்பு ஈர்த்தது. ஒருவரை விட்டு ஒருவர், பிரிந்து வாழ முடியாத நிலை ஏற்பட்டது. ஒரு நிமிடம் கூட பிரிய முடியாத உணர்வு ஏற்பட்டது.

அதனால் 2010ம் ஆண்டு நானும் அரசும் வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்து கொண்டோம். என் பெண் குழந்தையை மட்டும் அழைத்துக்கொண்டு திருமணம் செய்து, சந்தோசமாக கொண்டாட்டமாக வாழ்ந்தோம். முறையாக விவாகரத்து பெற்று எங்கள் வாழ்க்கையை தொடரலாம் என்று தான், 'சொல்வதெல்லாம் உண்மை' நிகழ்ச்சிக்குப் போனோம். அந்த நிகழ்ச்சியில் நிறைய கட் செய்து, திரித்துப் போட்டார்கள். அதனால் அதைப் பற்றி இப்போது பேச வேண்டியதில்லை.

அதையும் சமாளித்து ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுக்காமல் சந்தோசமாக வாழ்ந்தோம். இருவர் தரப்பிலும் விவாகரத்து பெற்று முறைப்படி வாழ்ந்தோம். எந்த ஒரு கணவரும் மனைவியும் அப்படி ஒரு வாழ்க்கையை வாழ முடியாது. எந்த எதிர்பார்ப்பும் இல்லாத வாழ்க்கையை வாழ்ந்தோம்.

2016ல் என் கணவர் அரசுக்கு தீட்சை பெற்று ஆன்மிக வழியில் சென்றார். என் கணவருக்கு நிறைய பக்தர்கள் உருவானார்கள். திடீரென 2019ல் அரசு இறந்தார். என்னால் அந்த கஷ்டத்தை, துயரத்தை தாங்கிக்கொள்ள முடியவில்லை. வார்த்தையால் சொல்ல முடியாத வேதனையை அடைந்தேன். அவர் இல்லாத வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியாமல் தற்கொலை முடிவுக்கு வந்தேன்.

அந்த நொடியில் என் பெண் குழந்தை உறங்குவதைக் கண்டு முடிவை மாற்றினேன். இந்த சமுதாயத்தில் அந்த குழந்தையை தனியாக விட்டுச் செல்ல முடியாது என்பதால் என் முடிவை மாற்றினேன். மறுநாள் காலையில் அழுது கொண்டிருக்கும் போது ஒரு விசித்திர நிகழ்வு நடந்தது. ஒரு படம் மாதிரி காட்சி கண்ணுக்குத் தென்பட்டது. நானும் அரசுவும் ஜென்ம ஜென்மமாக என்ன பந்தத்தில் இருந்தோம், எதற்காக இந்த ஜென்மத்தில் இணைந்தோம், எதற்காக அரசு இறந்தார் என்பதை எல்லாம் அந்த காட்சி வெளிப்படுத்தியது.

அந்த நொடியில், அரசின் உடலில் இருந்து வெளியேறிய உயிர், என் உச்சந்தலை வழியாக இறங்கி, உள்ளங்கால் வரை பரவியது. இரண்டு இறை சக்தி ஒன்றோடு ஒன்றாக கலந்தது. அந்த நிமிடம், அனைத்து விரக்தியும் விலகி, ஆனந்தமும், பரவசமும் நிரம்பியது. அந்த அனுபவத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அதன் பின் அவருடைய பக்தர்களை நான் வழிநடத்தத் தொடங்கினேன்.

> **மந்திரச்சொல்**
>
> தோல்வியை விட சந்தேகமே லட்சியத்துக்கு மிகப்பெரும் எதிரி



திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் அடுத்த ராஜாதோப்பு கிராமத்தில் ஒரு ஏக்கர் நிலம் வாங்கி குடியேறினேன். நான் சாமியார் இல்லை, கடவுள் என்று அறிவித்து மக்களுக்கு வழி காட்டி வருகிறேன். கடவுளாக என்னை அலங்கரித்துக்கொண்டு பக்தர்களுக்கு ஆசி வழங்கி வருகிறேன். இந்த ஆசிரமத்தில் அரசுவின் உருவச்சிலை இருக்கிறது.

நான் அரசுவை திருமணம் செய்துகொண்ட அதே நவம்பர் 28ம் தேதி எனது உதவியாளர் ரோஹித் என்பவரை 3வதாக திருமணம் செய்து கொண்டேன். இதுவும் இறை கட்டளை. இப்போது தம்பதியர் சமேதராக பக்தர்களுக்குக் காட்சியளித்து ஆசிர்வாதம் செய்துவருகிறோம்'' என்று வீடியோக்கள் மூலம் தெளிவாகப் பேசுகிறார்.

## அம்மன் தரிசனம்

உங்களுடைய குறைகள் தீர அம்மாவிடம் நேரடியாக அருளாசி பெறுவதற்கு திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூரில் அமைந்துள்ள அம்மாவின் சக்தி பீடத்தில் வாரந்தோறும் செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் அம்மாவின் தரிசனத்திற்கு வந்து அம்மாவிடம் அருளாசி பெற்றுக் கொள்ளலாம், அனுமதி இலவசம் என்று அறிவிப்பு செய்கிறார்கள்.

"அம்மாவை தரிசிக்க நேரடியாக வர இயலாதவர்கள், அன்னையின் திருவுருவப் படம் வைத்து காலை மாலை இரு வேளைகளிலும் அன்னையை மனமார பக்தி செய்து வந்தால்,உங்களின் மனக்குறைகள் யாவும் அன்னையின் பேரருளால் நிவர்த்தி செய்யப்படும்'' என்று அன்னபூரணி படங்களை அங்குவரும் பக்தர்களுக்குக் கொடுக்கிறார்கள்.

ஆன்மீகத்தில் தேடுதல் உள்ளவர்கள், ஆன்மீகத்தில் நிறை நிலை அடைய விருப்பம் உள்ளவர்கள், தன்னை அல்லது இறைவனை உணரும் நாட்டம் கொண்டவர்கள் யாவரும் அம்மாவிடம் தீட்சை பெற்றுக் கொண்டு ஆன்மீகத்தில் பயணிக்கலாம்...நீங்கள் உலகில் எங்கு இருந்தாலும் நீங்கள் இருந்த இடத்தில் இருந்தே அம்மாவிடம் தீட்சை பெற்றுக் கொள்ளலாம். தீட்சை பெற்ற கணத்தில் இருந்து நீங்கள் நிறைநிலையாம் முக்தி நிலை அடையும் வரையிலும் அம்மா உங்களை வழிநடத்திச் செல்வார் என்கிறார்கள்.


இதை உண்மை என்று நம்பியோ அல்லது சும்மா ஒரு தரிசனம் செய்துவைப்போம் என்ற மனப்பான்மையிலோ கூட்டம் வந்துகொண்டே இருக்கிறது. அன்னபூரணியும் ஆசிர்வாதம் செய்துகொண்டே இருக்கிறார்.

## சீடர்கள் சாட்சியம்

பக்தர்களை விட அதிக எண்ணிக்கையில்


www.gyaanaguru.com

# அன்னபூரணி



அன்னபூரணிக்கு சீடர்கள் இருக்கிறார்கள். ஏன் சீடர்களாக இருக்கிறோம் என்று பேசுகையில், "அரசு இறந்த பிறகு சீடர்களுக்கு தியானத்திலும் கனவிலும், 'அம்மாவே இனி வழி நடத்துவார்' என்று உணர்த்தப்பட்டது. அடுத்த நாளே சீடர்களுக்கு அம்மாவிடம் இருந்து அழைப்பு வந்தது. அம்மா தீட்சை கொடுக்க ஆரம்பித்தார்.. சீடர்களை வழிநடத்தினார்...ஆன்மீக அனுபவங்கள் முன்பை விட அதிகமாகவும், விரைவாகவும் கிடைத்தது..சீடர்களுக்கோ ஆச்சர்யம்.

ஆம் அரசு அய்யாவின் உயிரும் அம்மா அவர்களின் உயிரும் ஏக உணர்வாக இரண்டறக்கலந்து வெளிப்படுவதை சீடர்களால் அனுபவ பூர்வமாகவே உணர முடிந்தது.. இறை சக்தி தன் அவதாரத்தை வெளிப்படுத்தும் நேரம் நெருங்கியது. 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் அம்மா அவர்கள் சீடர்களை அழைத்து சில காலம் அப்படியே பயிற்சியை தொடருங்கள் என்னை யாரும் தொடர்பு கொள்ள வேண்டாம். உங்களை உணர்வாக நான் வழிநடத்துகிறேன்... என்று கூறி சமாதி நிலைக்கு சென்று விட்டார்கள்.

அதன் பிறகு 2021ம் வருடம் டிசம்பர் 5ம் தேதி, இதுகாறும் தம்மை வழிநடத்திய சக்தி தன்னிலே ஊடுருவி பிரபஞ்சம் முழுதும் வெளிப்பட்டு நானும் நீயும் வேறல்ல நானே நீ... நீயே சக்தி.. பராசக்தி என்று அம்மாவிடம் வெளிப்பட்டு நின்றது. அம்மா சக்தியாய் வெளிப்பட்டு நின்ற பிரளயத்தை அம்மாவின் சீடர்களால் தெளிவாக உணர முடிந்தது.

நமக்கு பிறப்பு கொடுக்கப்பட்டதன் நோக்கமே இந்த பிரபஞ்ச வாழ்வை நன்றியுணர்வோடு வாழ்ந்து இந்த பிறப்பில் விடுதலை அடைந்து அதாவது முக்திபெற்று, ஆதிமூலமாம் பராசக்தி அன்னையின் திருவடி சேர்வதே ஆகும். ஆனால் மனித பிறவி கிடைத்த நாமோ, அந்த நன்றியுணர்வை மறந்து அன்னை நம் வாழ்விற்கு பரிசாக கொடுத்த உடலிலும் , மனதிலும் பற்றிக்கொண்டு நமக்கு கிடைத்த அறிவையும் வீணடித்து நான் என்ற ஆணவத்தில் கர்வம் கொண்டு நிலைபெற்று விட்டோம். நாம் வந்த வழியையும் மறந்து, பிறப்பின் நோக்கத்தையும் மறந்து யுக யுகமாக ஆணவத்திலேயே குடிகொண்டு விட்டோம்.

அன்புக்கு இலக்கணமாம் பொறுமையின் சிகரமாம் அன்னையவள், சத்தியத்திற்கு ஏற்படும் கலங்கத்தைத் தாளாமல் ஆணவ உலகத்தை ஆன்மீக உலகமாக மாற்றி தன் பேரன்பை இப்புவிதனில் மலர வைத்து, இந்த பிரபஞ்சத்தை பூஞ்சோலையாக மாற்றும் வைராக்கியம் பூண்டு இதுகாறும் எடுத்த அவதாரங்களின் ஒட்டுமொத்த சக்தியும் கொண்டு மாபெரும் அவதாரமாக மகாசக்தியாக இப்பிரபஞ்சத்தில் உடலெடுத்து நம் தாய் அன்னபூரணி அரசு வடிவாக அவதாரம் கொண்டிருக்கிறார்.

மக்கள் அனைவரும் தமக்குக் கொடுக்கப்பட்ட இந்த அற்புதமான வாழ்வை கொண்டாட்டமாய் வாழ வேண்டும்... தான் யார் என்றும், தன்னை இயக்கும் சக்தி எது என்றும், எதற்காக பிறவி எடுத்து வந்தோம் என்றும் இங்கு வாழும் ஒவ்வொருவரும் உணர வேண்டும்...இதற்குத் தடையாய் இருக்கும் அனைத்து விஷயங்களில் இருந்தும், கர்ம வினைகளில் இருந்தும் அவர்களை மீட்டு தன் இறையுணர்வில் ஆனந்தமாய் நிலைகொள்ளச் செய்யவே அதாவது முக்தி அளிக்கவே, பேரன்பு கொண்டு இந்த அகிலம்தனில் அம்மா அவதாரமாக மலர்ந்திருக்கிறார்..." என்று அன்னபூரணியின் புகழ் பாடுகிறார்கள்.

## ஞானகுரு ஆருடம்

அன்னபூரணி தன்னை கடவுள் என்கிறார். அவரது சீடர்களும் அவரை கடவுள் என்று ஏற்றுக் கொள்கிறார்கள். பக்தர்களும் வந்து ஆசிர்வாதம் பெற்றுச் செல்கிறார்கள். உண்மையில் அன்னபூரணி கடவுள்தானா என்று ஞானகுருவிடம் கேட்டோம்.

"சின்னப் பிள்ளைகள் விளையாடும் நேரத்தில் டீச்சர், அம்மா, போலீஸ் என்பது போல் நடிப்பார்கள். அதன் பிறகு அந்த கதாபாத்திரத்தை மறந்துவிடுவார்கள். அதேபோல், சில பெண்களுக்கு கோயில் சுற்றுச்சூழல், மணியோசை, குலவை, கொட்டுச்சத்தம் கேட்டதும் தன் மீது சாமி இறங்கிவிட்டதாக நினைப்பு உருவாகும். அவர்களும் கொஞ்ச நேரத்தில் இயல்புக்குத் திரும்பிவிடுவார்கள். இவை எல்லாம் தீவிரமான மனநலன் பாதிப்பு அல்ல.

ஆனால், ஒரு குழந்தை எல்லா நேரமும் தன்னை டீச்சராகவே நினைக்கிறது என்றால் மனநலன் பாதிக்கப்பட்டது என்று அர்த்தம். தன்னை ஒரு பெண் சாமி என்று சொல்லிக்கொண்டாலும் மனநலன் பாதிக்கப்பட்டவர் என்றே கருத வேண்டும்.

அதேநேரம், தான் சாமி இல்லை என்று தெரிந்தும் சாமியாராக சிலர் நடித்து பணம் சம்பாதிப்பது உண்டு. அப்படி, பணம் சம்பாதிக்கிறார் என்பது புரிந்தாலும் சிவராத்திரிக்கு ஆயிரக்கணக்கில் டிக்கெட் வாங்கி ஜக்கி வாசுதேவ் உடுக்கையாட்டத்தைப் பார்க்கிறார்கள் என்றால், 'ஒருவேளை நமக்கு ஏதேனும் நல்லது நடந்தால் நடக்கட்டும்' என்ற எண்ணம். அதாவது, மயிரைக் கட்டி மலையை இழுப்போம். வந்தால் மலை, போனால் மயிறு என்ற எண்ணத்திலே நிறைய பேர் நித்தியானந்தா, ஜக்கி வாசுதேவ், அன்னபூரணி போன்றவர்களை தரிசிக்கப் போகிறார்கள்.

பணம் பறிப்பதற்குத் திட்டமிட்டு வேடம் போடும் நித்தி, ஜக்கி, அன்னபூரணி போன்றவர்கள் தெளிவான மனநிலையில் உள்ளவர்கள். இவர்களை வேடிக்கைப் பாரக்கப் போகிறவர்களும் தெளிவான மனநிலையில் உள்ளவர்கள். எதற்கும் வணங்கிவைப்போம் என்று கும்பிடுபவர்கள் சுலநலமிகளே தவிர மன நோயாளிகள் அல்ல.

ஆனால், இவர்களை நம்பி சீடர்கள் என்று ஒரு பெரிய கும்பல் இயங்குகிறது. அவர்கள் நிச்சயம் மனநிலை தவறியவர்கள். இப்படிப்பட்ட நபர்களை எல்லாம் மீட்டு சிகிச்சை அளிக்க வேண்டியது அரசின் கடமை. ஆனால், அரசாங்கமே இப்படிப்பட்ட போலிகள் முன்பு கை கட்டி நிற்பது தான் வேடிக்கை" என்று சிரிக்கிறார் ஞானகுரு.

"உண்மையிலே அன்னபூரணி கடவுள் அவதாரமாக இருக்க முடியாதா.? பெரிய அளவுக்கு அன்னபூரணி வளர்வாரா..?

"மனிதத் தன்மை உள்ள யாரும் கடவுளாக முடியாது. அன்னபூரணிக்குப் பசிக்காதா..? அடித்தால் வலிக்காதா..? தினமும் உடல் கழிவுகளை அவர் வெளியேற்றுவது இல்லையா? இதையெல்லாம் அன்னபூரணி கடந்துவிட்டார் என்றால் சொல்லுங்கள். நானும் அவரை வணங்க வருகிறேன். நித்தியானந்தா போன்று மாட்டிக் கொள்ளக் கூடாது என்றே மூன்றாவது கல்யாணம் செய்துகொண்டு பாதுகாப்புடன் இருக்கிறார் அன்னபூரணி.

அவர் சின்ன அளவில் ஏமாற்றிப் பிழைத்து வருகிறார். அவர் ஜக்கி போன்று தெளிவாகத் திட்டமிட்டு ரஜினிகாந்த், பிரதமர் மோடி போன்ற அறைகுறை பக்தர்களை தன்னுடைய சீடர்களாக மாற்றிவிட்டால் மேல்மருவத்தூர் அம்மாவை விட புகழ் பெற்றுவிடுவார். ஆக, அவருக்கு இப்போது தேவை யாரேனும் ஒரே ஒரு பிரபலம் மட்டுமே. அப்படி அமைந்துவிட்டால் நித்தியானந்தாவை விட, அமிர்தானந்தா மயியை விட அன்னபூரணி நிச்சயம் நல்ல கடவுளாக மாறிவிடுவார்" என்கிறார் ஞானகுரு.


www.gyaanaguru.com



# பேய் பொண்டாட்டி

வாழ்க்கை தத்துவத்திற்கும் சுலபமான வாழ்க்கை நெறிக்கும் வழி காட்டுபவை ஜென் கதைகள். ஒரு கதையில் பல கதைகள் அடங்கியிருப்பதுண்டு. அப்படியொரு ஜென் கதை இது.

ஒரு செல்வந்தனின் மனைவி மிகவும் உடல் நிலை சரியில்லாமல் படுக்கையில் இருந்தாள். கிட்டத்தட்ட சாகும் தருவாயில் அவள் செல்வந்தனிடம், ‘நான் உன்னை உயிருக்குயிராக நேசிக்கிறேன். அதனால் உன்னை விட்டுப் பிரிய எனக்கு விருப்பமே இல்லை. நான் இறந்தபின், நீ யாரையும் கல்யாணம் செய்துக்கொள்ள மாட்டேன் என்று எனக்கு ஒரு சத்தியம் செய்துகொடு. அப்படி மீறி நீ யாரையாவது கல்யாணம் செய்துகொண்டால், தினமும் நான் உன் கனவில் வந்து உன்னை தொந்தரவு செய்துகொண்டே இருப்பேன்’ என்று சத்தியம் வாங்கிக்கொண்டு இறந்து விடுகிறாள்.

அவள் இறந்து பல மாதங்களான பிறகும் செல்வந்தன் எந்தவொரு பெண்ணையும் ஏறெடுத்தும் பார்க்காமல் இருக்கிறான். ஆனால், திடீரென்று ஒரு பெண்ணைப் பார்த்து காதல்வயப்படுகிறான். காதல் நிச்சயதார்த்தம் வரை செல்கிறது. ஆனால், அன்று இரவு திடீரென்று இறந்துபோன அவன் மனைவி பேயாக வருகிறாள்.

செல்வந்தன் செய்து கொடுத்த சத்தியத்தை மீறிவிட்டதாக குற்றம் சாட்டுகிறாள். அன்று முதல் ஒவ்வொரு இரவிலும் பேயாக வந்து அவனை இம்சிக்கிறாள். அதுமட்டுமல்லாமல், அவனுடைய காதலியும் அவனும் பேசிகொள்ளும் ஒவ்வொரு வார்த்தையையும் அப்படியே ஒப்பித்து, அதற்கு அர்த்தம் கேட்கிறாள். இதனால், ஒவ்வொரு இரவிலும் அவன் தூங்கமுடியாமல் தவிக்கிறான்.

ஞானகுரு
# மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ்
3 - 12

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586,
72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** www.gyaanaguru.com

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த செல்வந்தன், இந்த பேய் விவகாரத்துக்கு ஒரு முடிவு கட்டிவிட வேண்டு மென்று அந்த ஊரில் உள்ள ஒரு ஜென் துறவியிடம் சென்று தன் கஷ்டத்தைச் சொல்லி அறிவுரை கேட்கிறான். கதையைக்கேட்ட ஜென் துறவி, 'இந்தப் பேய் மிகவும் புத்திசாலியானப் பேய்தான்' என்கிறார்.

'ஆமாம். நான் சொல்கிற, செய்கிற, பேசுகிற அனைத்தையும் எப்படியோ தெரிந்து கொள்கிறது அந்த பேய்' என்கிறான். அத்துறவி புன்னகைத்த படி,, 'நல்லது. உன் குறையை தீர்க்கிறேன். அடுத்தமுறை அந்த பேயைப் பார்க்கும்போது நான் சொல்கிறபடி செய்' என்று ஒரு அறிவுரை சொல்லி அவனை அனுப்பி வைக்கிறார்!

அன்று இரவு திரும்பவும் மனைவி பேய் வருகிறது. அவனும் அதன் வருகையை எதிர்ப்பார்த்துக் காத்திருந்தவனாய், 'உன்னைப் போல் ஒரு புத்திசாலி யான ஒரு பேயை நான் இதுவரைப் பார்த்ததேயில்லை, அதுமட்டு மில்லாமல் உன்னிடமிருந்து என்னால் எதையுமே மறைக்க முடியவில்லை. ஆனால், நான் கேட்கும் ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் நீ விடை சோல்லிவி ட்டால்,நான்இந்ததிருமணத்தைநிறுத்திவிடுகிறேன், அதன் பின்னர் வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சாரியாகவே இருந்துவிடுகிறேன்' என்கிறான்.

'சரி, என்ன உன் கேள்வி?' என்கிறது பேய்.

உடனே செல்வந்தன் ஒரு பையிலிருந்து கை நிறைய கோதுமையை அள்ளி, "என் கையில் எத்தனை கோதுமை மணிகள் இருக்கிறது என்று சரியாகச் சொல்' என்கிறான். அவ்வளவுதான், அந்தக் கேள்வியைக் கேட்டு தலைதெறிக்க ஓடிய பேய், அதன் பின்னர் அவன் வாழ்க்கையில் திரும்ப வரவே இல்லை.

இது கதை. ஆனால், இது கதை மட்டுமல்ல. கதையை புரிந்துகொள்வதும் ஒரு கலை. பெரும்பாலான மக்கள் கதைகளில் வரும் வார்த்தைகளையும், கதையையும் மட்டுமே புரிந்து கொள்கிறார்களே தவிர, கதையின் மையக்கருவை புரிந்துகொள்வதில்லை என்பதுதான் உண்மை. இந்த கதையை ஒவ்வொருவரும் எப்படியெல்லாம் புரிந்துகொண்டார்கள் என்று, சொன்ன சிலருடைய பதில்கள் இங்கே.



- யாருக்கும் எல்லாம் தெரிவதில்லை. பேய்களுக்கு கூடத்தான். அப்படித் தான் நாம் சில வகையில் வேண்டு மானால் நாம் புத்திசாலியாக இருக்கலாம், ஆனால் எல்லா வகையிலும் அல்ல





# மந்திரச்சொல்


நீங்கள் ஒளியாக இருந்தால் போதும், இருள் தானே மறைந்து விடும்.

- அந்த பேய் ஏன் திரும்ப திரும்ப வந்தது? எப்படி எல்லாவற்றையும் தெரிந்து கொள்கிறது என்று அவன் எப்பொழுதும் ஆச்சரியப்பட்டான். அதனால், அந்தப் பேய் அவனை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. ஆனால், ஒரு நாள் எதிர்த்து நின்று தைரியமாக அவன் கேள்வி கேட்டவுடன் அந்தப் பேய் ஓடிவிட்டது.
- அவனில் ஒரு பகுதிதான் அந்தப் பேயே.... அதனால், அவனுக்குத் தெரியாத எதுவும் அந்தப் பேய்க்கு தெரியவில்லை.
- அவனுடைய மனதிலிருந்துதான் அந்த பேய் வருகிறது. அதை உருவாக்கியவனும் அவனேதான். அவனுடைய குற்ற உணர்வுதான் பேயாக வந்து அவனை துன்புறுத்துகிறது.
- நாம் பயப்படுவதால்தான் எதுவுமே நம்மை பயமுறுத்துகிறது. அதை கண்டுகொள்ளாமல் சென்றுவிட்டால் அது மறைந்துவிடுகிறது"

இப்படி இன்னும் பல புரிதல்கள் இருக்கின்றன. கதை ஒன்றுதான். ஆனால் ஒவ்வொருவரின் பார்வைக் கோணத்தில் அது பல்வேறு விதமாக திரிந்து, கடைசியில் கதையின் அடிப்படைக் கருத்து காணாமல் போய்விடுகிறது. இதுபோலத்தான் நம் பயங்களும், வாழ்வியல் தொடர்பான பிரச்சினைகளும். உண்மையில் பேய் என்பது நம் பயங்களும், மனதில் ஏற்பட்டு நம்மை அலைக்கழிக்கும் ஒரு வித உளவியல் நோய்களுமே. அத்தகைய பயங்களை உருவாக்கி நம்மை இம்சிப்பதே நம் மூளைதான். அது பயங்களையும் உருவாக்கும், அதேசமயம் வேறு யாரோ ஒருவர் வந்து நம்மை பயமுறுத்து வது போல புலம்பவும் செய்யும். ஆக, நம் பயங்களுக்கும் துன்பங்களுக்கும் நம் மூளைதான் காரணம் என்று கண்டுபிடித்து விட்டால் வாழ்க்கையின் போக்கே மாறிவிடும்.

இதைத்தான் சொல்கிறது ஜென். அவர்கள் சொல்வது என்னவென்றால், பேய்கள் என்பவை நம் எதிர்ப்பார்ப்புகளும் ஆசைகளும்தான். பயப்படுவதற்கும், துன்பப்படுவதற்கும் நாம் விரும்பவில்லை என்றால் வேறு ஒருவர் வந்து நம்மை எப்படி துன்புறுத்த முடியும்? சற்று சிந்தியுங்கள். அதனால், நாம் உருவாக்கிய பேய்களை (பயம், பற்று, எதிர்ப்பார்ப்பு, ஆசை, போதை) நாமேதான் அழிக்க வேண்டும். மொத்தத்தில் பேய்கள் நம்மைப் போன்ற உருவமில்லாதவை, வெறும் மனப் பிரம்மைகள் தான்... அவற்றை தூக்கி எறிந்துவிட்டால், மகிழ்ச்சியுடன் வாழலாம்.


www.gyaanaguru.com





# வாழ்நாள் முழுவதும் உங்கள் துணை யார்

மிகவும் வருத்தமான மனநிலையில் ஞானகுருவை சந்திக்க வந்தார் மகேந்திரன். அவரது கண்கள் கொஞ்சம் கலங்கியிருந்தது. என்னவென்று கண்களால் விசாரித்தார்.

“நான் என் நண்பன் ஒருவனை மிகவும் நம்பினேன். அவசரம் என்று அவன் கேட்ட நேரத்தில் என் மனைவியின் நகையை விற்று பணம் கொடுத்தேன். இப்போது அவன் திடீரென குடும்பத்துடன் தலைமறைவு ஆகிவிட்டான். என்னைப் போன்று நிறைய பேரிடம் பணம் வாங்கி ஏமாற்றி யிருக்கிறான். நான் அவனை என் வாழ்நாள் முழுக்க எனக்கு துணையாக இருப்பான் என்று நம்பியிருந்தேன். இனி, நான் யாரையும் நம்பமுடியாமல் செய்துவிட்டான்... இப்படியொரு ஏமாளியான நான் வாழவேண்டுமா என்று சிந்திக்கும் அளவுக்குத் துரோகம் செய்துவிட்டான்” என்றார் கண்ணீருடன்.

“உன் வாழ்க்கையில் ஒரே ஒருவரை மட்டும் தான் நீ நம்ப முடியும். எல்லா நேரமும் உன் பக்கம் நிற்பார்...”

“என் மனைவியா..?”

“இல்லை...;;”

“என் அம்மா அல்லது அப்பாவைச் சொல்கிறீர்களா..?”

“இல்லை...”

“வேறு யார், என் பிள்ளைகளை நம்ப வேண்டுமா..?”

“இல்லவே இல்லை...”

“அப்படியென்றால் உடன் பிறந்தவர்களை நம்ப வேண்டுமா... உலகிலேயே உன்னதமான உறவு என்று நட்பைச் சொல்கிறார்கள். அந்த உறவிலே ஏமாற்றுகிறார்கள் எனும் போது வேறு யாரை நம்ப முடியும்..?”

“இப்படியெல்லாம் அவநம்பிக்கை கொள்ளாதே... நீ அவர் ஒருவரைத் தான் நம்ப வேண்டும், நம்ப முடியும். அவர் மட்டுமே கடைசி வரை உன்னுடன் இருப்பார்...”

“யார் கடவுளைச் சொல்கிறீர்களா.. உங்களுக்குத் தான் அவர் மீது நம்பிக்கை இல்லையே...”

“யார் யாரையோ சொல்கிறாய். கண்ணுக்குத் தெரிந்த உன் உடம்பைச் சொல்லத் தெரியவில்லை. இந்த உடம்பு மட்டுமே உன் வாழ்க்கைத் துணை. இது மட்டுமே உன் கடைசி காலம் வரையிலும் உன்னுடன் நிற்கும். இந்த உடம்பை மட்டும் நீ நம்பினால் போதும். வேறு யாரையும் எதற்காகவும் நம்ப வேண்டாம். மற்றவர்கள் எல்லாம் வழித் துணை மட்டுமே. பயணத்தில் யார் யாரோ உன்னுடன் வருவார்கள், அவரவர் நிறுத்தம் வந்ததும் இறங்கிக் கொள்வார்கள். இறப்பு வரை உன்னுடன் இருக்கப் போவது உங்கள் உடம்பு தான். இதை மட்டும் பத்திரமாகப் பார்த்துக் கொள்.யாருக்காகவும் இந்த உடம்பைவிட்டுக்கொடுக்காதே...”

“இந்த உடம்புக்கு நான் என்ன செய்ய வேண்டும்..?”

“உடம்புக்கு அன்பு கொடு. நல்ல உணவு கொடு. போதிய உழைப்பு கொடு. நல்ல ஓய்வு கொடு. அழகான ஆடை கொடு. உடலுக்குள் இருக்கும் மனதுக்கு மகிழ்ச்சி கொடு. ஒட்டுமொத்த உடலுக்கும் அழகு கொடு...”

“அது எப்படி?”

“சினிமா நட்சத்திரங்கள் உடம்புக்கு அத்தனை தூரம் மெனக்கெடுகிறார்கள், அதனாலே அழகாக இருக்கிறார்கள். நீயும் உடம்பு மீது காதல் கொள். இந்த உடம்புக்கு கெடுதல் செய்யும் எந்த செயலையும் செய்யாதே. உன்னைத் தவிர வேறு யாரும் உன் உடலை பாதுகாக்க முடியாது. வேறு ஒரு நபர் ஏமாற்றினார் என்பதற்காக உன் உடலை யும் மனதையும் கெடுத்துக்கொள்ளாதே. நண்பர் செய்த தவறுக்கு உன் உடம்புக்கு தண்டன கொடுக்காதே...”

“ஆனால், என்னால் ஏமாற்றத்தை தாங்க முடியவில்லையே...”

“மன்னிப்பதற்குக் கற்றுக்கொள். நீயே அவருக்குக் கொடுத்ததாக நினைத்துக் கொள். மாற்ற முடியாததை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்” என்றார் ஞானகுரு.

இப்போது மகேந்திரன் தெளிவுக்கு வந்திருந்தார்.

# விவேகானந்தரின் மூட நம்பிக்கை



மூடநம்பிக்கைகளை எல்லாம் மதம் என்ற பெயரில் அனுமதித்துத் தன்னைத் தானே பாழ்படுத்திக் கொள்கின்ற மூளையிடம் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அவன் கல்வி அறிவு பெற்றவன். ஆனால், ஒன்றைப் பற்றிக்கொண்டு அதுதான் சரியென்று சாதிப்பவன். ஒவ்வொரு மூடநம்பிக்கையும் அவனுக்கு வேத விதி. அவனைப் பொறுத்தவரை அவைகளைப் பின்பற்றுவதைச் சார்ந்துதான் தேசிய வாழ்க்கையே இருக்கிறது. இத்தகையவர் களிடம் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட மூட நம்பிக்கைகள் உடைய முட்டாள்களாக இருப்பதைவிட நீங்கள் நாத்திகர்களாக இருப்பதையே நான் விரும்புகிறேன். ஏனென்றால் நாத்திகனிடம் உயிர்த்துடிப்பு இருக்கிறது. அவனிடம் நீங்கள் ஏதாவது நல்லதை உருவாக்க முடியும்.

ஆனால், மூடநம்பிக்கை மட்டும் நுழைந்துவிடுமானால் சிந்திக்கும் திறன் போய்விடுகிறது; மூளை மழுங்கிவிடுகிறது.

விவேகானந்தர் (1897 பிப்ரவரி 9 அன்று
திருவல்லிக்கேணியில் பேசிய உரையிலிருந்து)

www.gyaanaguru.com

? பணத்தை மதிக்க வேண்டுமா..?

– சி.ராஜசேகர், நன்னிலம்.

**ஞானகுரு ;**

உங்களுக்குப் பிடித்தமான கார் என்றால் அதை பத்திரமாக பாதுகாப்பீர்கள். பிடித்த மனிதர் என்றால் மதிப்பு கொடுப்பீர்கள். அப்படி பணத்தையும் சொந்தம் கொண்டாடுவது நல்லது தான். ஏனென்றால் உங்களிடம் இருக்கும் பணமும் நீங்களும் வெவ்வேறு அல்ல. அதாவது, உங்கள் உழைப்பு தான் பணமாக மாற்றப்பட்டு உங்கள் கையில் வந்து சேர்கிறது. எனவே, பணத்தைக் கொண்டாடுவதில் தவறு இல்லை. எத்தனை அதிகம் பணம் வைத்திருக்கிறீர்களோ, அத்தனை அதிகம் உழைத்திருக்கிறீர்கள் என்று அர்த்தம்.



# ஞானகுரு பதில்கள்

? முதியவர்கள், ஏழைகள், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவுவதால் நமக்குப் புண்ணியம் கிடைக்குமா..?

– பி.பாண்டியராஜன், வ.உ.சி.நகர்.

**ஞானகுரு :**

எல்லோரும் பாராட்டுவார்கள் என்ற எண்ணத்தில் ஓவியர்கள் வரைவதில்லை, கவிஞர்கள் எழுதுவ தில்லை. அவர்கள் அந்த படைப்பில் திருப்தி அடை கிறார்கள். அப்படித்தான் பிறருக்குக் கொடுப்பதில் உங்களுக்கு திருப்தியும் சந்தோஷமும் கிடைக்கிறது என்றால் மட்டும் உதவி செய்யுங்கள். புண்ணியம் கிடைக்கும் என்று நம்பினால் ஏமாந்து போவீர்கள்.



? தண்ணீரை தரையில் தோண்டாதீர்கள், வானில் இருந்து வரவழையுங்கள் என்று புதுமொழி வருகிறதே, இது சாத்தியமா?

– எஸ்.கருப்பசாமி, முத்தால்நகர்.

**ஞானகுரு :**

சாத்தியமா இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லை. ஏனென்றால் இன்றும் மனிதரைத் தவிர அத்தனை உயிரினங்களும் வானத்தை மட்டுமே நம்பியிருக்கின்றன. எந்த மிருகமும் ஆறு, குளம் வெட்டுவதில்லை, கிணறு தோண்டு வதில்லை. ஆனால், தண்ணீரைத் தேடி அலைந்துகொண்டே இருக்கின்றன. மனிதனும் ஒரு காலத்தில் தண்ணீரைத் தேடி நாடோடியாக ஓடியவனே. விஞ்ஞான வளர்ச்சியாலே ஒரே இடத்தில் தங்கி வாழ்ந்துவருகிறான். மீண்டும் மனிதன் நாடோடியாக மாற வேண்டிய அவசியம் இல்லை.





? இசைக் கடவுள் இளையராஜாவுக்கு இப்படி ஒரு அவமானம் நிகழ்ந்திருக்கிறதே..?

– டி.ராமகிருஷ்ணன், நாகர்கோவில்.

**ஞானகுரு :**

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் கருவறைக்குள் இளையராஜா அறியாமல் (?) செல்ல முயன்ற நேரத்தில், விதிமீறல் என்று வெளியே நிறுத்தப்பட்டிருக்கிறார். இந்த சனாதன தர்மத்தை இளையராஜா பெருமையுடன் ஏற்றுக்கொள்பவர். சாதி எனும் தாழ்வு மனப்பான்மையில் உழல்பவர். அதனாலே, 'என்னை மையமாக வைத்து சிலர் பொய்யான வதந்திகளைப் பரப்பி வருகிறார்கள். நான் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் என்னுடைய சுய மரியாதையை விட்டுக் கொடுப்பவன் அல்ல, விட்டுக்கொடுக்கவும் இல்லை..' என்று கூறி பிரச்னையை முடித்து வைத்திருக்கிறார்.

இளையராஜாவை யாரும் அவமானம் செய்யவில்லை, அவரை இசைக் கடவுளாகப் போற்றுகிறோம் என்று பா.ஜ.க.வினரும், அறநிலையத் துறையினரும், ஆன்மிகவாதிகளும் மீண்டும் மீண்டும் அழுத்திச் சொல்கிறார்கள். இப்படியெல்லாம் சிரமப்பட்டு தன்னிலை விளக்கம் கொடுப்பதற்குப் பதிலாக சின்ன மாற்றம் செய்துவிடலாம்.

மனிதரால் மனிதருக்காக உருவாக்கப்பட்டவை சட்டங்கள். ஆகமவிதிகள், வேதங்கள், மனு தர்மம், பைபிள், குரான் போன்ற எல்லாமே மனிதரால் எழுதப்பட்டவை. சட்டங்களை காலத்துக்கு ஏற்ப மாற்றுவது போன்று ஆகம விதிகளையும் மாற்றுவதில் எந்தத் தவறும் கிடையாது.

இளையராஜா இந்த யுகத்தின் மாபெரும் சாதனையாளர் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து கிடையாது. அப்படிப்பட்ட ஒருவர் அருகில் நின்று தரிசிப்பதை கடவுள் விரும்பவே செய்வார். ஆகவே, இளையராஜாவை கருவறைக்குள் அனுமதிக்கும் வகையில் ஆகமவிதிகள் மாற்றப்பட வேண்டும். இளையராஜாவை கருவறைக்குள் கூட்டிச்செல்வது தான் சனாதன தர்மத்தின் சிறப்பாக இருக்க வேண்டும்.

திராவிட அரசுக்கும் இளையராஜாவை உள்ளே அழைத்துச்செல்லும் விருப்பம் இல்லை என்பது தான் கேவலமான உண்மை. ஏனென்றால், இந்த அரசும் அதிகாரிகளும் நீதிமன்றங்களும் சனாதனத்துக்கு அடிமைகள்.



Q A

? தனியார் நிறுவனங்கள் அரசு நிறுவனங்களை விட சிறப்பாக நடைபெறக் காரணம் என்ன?

– சி.பார்கவி – சந்திரன், சேலம்

**ஞானகுரு :**

ஆட்கள் குறைவாக வசிக்கும் கிராமங்களுக்கு எந்த தனியார் நிறுவனமும் பஸ் விடுவதில்லை. 100 வீடுகள் கொண்ட கிராமத்தின் நன்மைக்காக எந்த தனியாரும் டவர் அமைப்பதில்லை. பணம் இல்லாதவருக்கு அரசு மருத்துவமனையில் நடக்கும் அறுவை சிகிச்சை போன்று எந்த தனியாரும் பணம் வாங்காமல் அறுவை சிகிச்சை செய்வதில்லை. இப்படியெல்லாம் மக்கள் சேவைக்கு முன்னுரிமை கொடுத்தால் நஷ்டத்தில் இயங்க வேண்டியிருக்கும், அதனால் வசதிக் குறைவு கள் இருக்கவே செய்யும். எனவே, லாபம் மட்டுமே நோக்கமாகக் கொண்டு இயங்கும் தனியார் நிறுவனங் களுடன் அரசு நிறுவனங்களை ஒப்பிடவே கூடாது.



www.gyaanaguru.com


www.gyaanaguru.com

? இன்றைய நவீன இந்தியாவில் காந்தி, காமராஜ், பாரதி, பகத்சிங் போன்றவர்கள் உலா வந்தால் எப்படியிருக்கும்?

– என்.சுகுணா நாகராஜன், சிவகாசி.

**ஞானகுரு :**

இந்தியா அடிமைப்பட்டுக் கிடந்த நேரத்தில் காந்தி, காமராஜ், பாரதி, பகத்சிங் மட்டுமல்ல லட்சக்கணக்கான மக்களிடம் தேசப்பற்று கொழுந்துவிட்டு எரிந்தது. எத்தனையோ பேர் நாட்டுக்காக உயிர் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இன்றைய சூழலில் அப்படிப்பட்ட தலைவர்களுக்குத் தேவை இல்லை. எனவே, அவர்கள் வரமாட்டார்கள். காமராஜர் உயிருடன் வந்தால் ஓட்டுக்குப் பணம் கொடுக்க முடியாமல் தோற்றுப் போவார். இஸ்லாமியர்களுக்கு ஆதரவாகப் பேசினால் காந்தி ஜெயிலில் தள்ளப்படுவார். நாடாளுமன்றத்தில் புரட்சி செய்தால் பகத் சிங் சுட்டுக் கொல்லப்படுவார்.



? இந்த கணத்தில் வாழ்ந்தால் அடுத்த கணத்துக்கு யார் பொறுப்பு ஏற்பார்கள்..?

– ஏ.மதியழகன், காட்பாடி.

**ஞானகுரு :**

ஒரு நாள் புத்தர் அவரது சீடர்களிடம், ''மனிதனின் ஆயுள் எவ்வளவு காலம்?'' என்று கேட்டார். சராசரி வாழ்வு குறித்து கேட்கிறார் என்ற எண்ணத்தில், ''70 ஆண்டுகள்'' என்றார். ஒரு சீடர். புத்தர் அமைதியாக இருக்கவே அடுத்த சீடர், ''50 ஆண்டுகள்'' என்றார். இப்படி அடுத்தடுத்து சில சீடர்கள் சொன்ன பதிலும் ஆண்டுக் கணக்கில் இருந்தன. எல்லாவற்றையும் மறுதலித்த புத்தர், ''ஒரு மூச்சு விடும் நேரம்!'' என்றார். சீடர்கள் குழப்பம் விலகாமல் விழிக்கவே, ''மூச்சு விடும் ஒரு கணத்தில் மனிதர் வாழ்க்கை மாறலாம். மூச்சு நின்றும் போகலாம். அதனால் இந்த கணத்தில் முழுமையாக வாழுங்கள்'' என்றார். அப்படியென்றால் எதிர்காலத்துக்கு என்ன செய்வது என்று ஒரு சீடர் கேட்டதற்கு, ''கையில் ஏந்தியிருக்கும் விளக்குடன் ஆயிரம் மைல் இருட்டுக்குள் நடக்க முடியும். எனவே, இந்த கணமே முக்கியம்'' என்றார். ஆம், இந்த கணத்தில் வாழப் பழகியவருக்கு அடுத்த கணத்திற்கும் வழி கிடைத்துவிடும்.



? என்ன தான் முயற்சித்தாலும் தலைவிதியை அதாவது தலையெழுத்தை மாற்ற முடியாது என்கிறார்களே, இது உண்மையா?

– ஏ.சிந்தனைசெல்வி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

**ஞானகுரு :**

தலைவிதியை யாராலும் மாற்ற முடியாது என்று சொல்பவர்கள் தான், எமனிடம் இருந்து கணவன் உயிரை சாவித்ரி மீட்டு வந்தாள் என்றும், எப்போதும் பதினாறு வயதாக மார்க்கண்டேயன் இருக்கிறான் என்றும் விதியை வென்ற கதையும் சொல்வார்கள். பக்தியும் தர்மமும் வெல்லும் என்பது ஆன்மிகவாதிகள் கருத்து. தகுதியுள்ளது தப்பிப்பிழைக்கும் என்பது அறிவியல் சொல்லும் உண்மை. திறமையை மட்டும் வைத்து ஒருவரது வெற்றியை உறுதி செய்ய முடியாது. ஏனென்றால் ஒருவரது வெற்றிக்கு சுற்றுச்சூழலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. சிலர் அதிர்ஷ்டம் என்று நம்புவார்கள். அது அதிர்ஷ்டமல்ல, சரியான வாய்ப்பு. இந்த வகையில் தன் மீது நம்பிக்கை வைப்பவர், தலைவிதியை அவரே எழுதிக்கொள்ள முடியும்.

? எந்த போதை மனிதனை அழிக்கும், எது உயிர்ப்பிக்கும்..?

– ஏ.குமார், அல்லம்பட்டி.

**ஞானகுரு ;**

இந்த மண் யாருக்கும் ஒரு போதும் சொந்தமாக இருந்ததே இல்லை. ஆனாலும், மண் மீதான போதையினாலே இந்த உலகில் லட்சக்கணக்கான போர்கள் நடைபெற்று கோடிக்கணக்கான மனிதர்கள் மடிந்திருக்கிறார்கள். பிறர் உதவியின்றி ஆரோக்கியமாக வாழும் வகையில் உடம்பைப் பழக்குவதே உயிர் போதை. இந்த போதையே உயிர்ப்பிக்கும் சக்தி.







ஞானகுரு தரிசனம்

# இறப்பு வருவதை அறிந்துகொள்ள முடியுமா?


“ஆன்மிக குரு என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் அத்தனை பேரும் ஆன்மிக வியாபாரிகள் தான். எந்த ஒரு மனிதனுக்கும் குரு என்பவர் தேவையே இல்லை” என்றார் ஞானகுரு.

“இன்றைய நிலையை வைத்துத்தானே இப்படிச் சொல்கிறீர்கள்?” என்று கேட்டார்.

“இல்லை... இந்த உலகம் ஆரம்பமான காலத்தில் இருந்து, ஆன்மிக குருவென அவதரித்தவர்கள் அத்தனை பேருமே மக்கள் பிரச்னைகளைத் தீர்த்த தில்லை. ஆனால், அவர்களுக்கேத் தெரியாதவற்றைச் சொல்லி மக்களை நம்ப வைத்தார்கள். அந்த நம்பிக்கையினால் மக்கள் திருப்தி அடைந்து ஏமாறத் தொடங்கினார்கள். அதனால் ஏதாவது பிரச்னை வந்தால், தாங்களே தீர்த்துக் கொள்ள நினைக்காமல் ஜோதிடர், சாமியார், மருத்துவர் என்று தேடிப் போனார்கள்...”

“யாருமே சரியில்லை என்று சொல்லும் நீங்களாவது நல்ல குருவாக இருக்கலாமே”

“எனக்கு எல்லாம் தெரிந்திருந்தால், புரிந்திருந்தால் மட்டுமே குருவாக இருக்க முடியும். ஆனால் எனக்கு எல்லாம் தெரியும் என்று எப்போது நினைக்கிறோனோ, அப்போதே எதுவும் தெரியவில்லை என்ற அர்த்தமாகிவிடும்” என்று முடித்தபோது சாரல் நின்று வெளிச்சம் வரத் தொடங்கியது.





“அப்படியென்றால் யாருமே குருவாக இருக்க முடியாதா?”

“ஆம்... யாரும் யாருக்கும் குருவாக இருக்க முடியாது. யாராவது ஒருவரை பின்பற்றத் தொடங்கி விட்டால், உண்மையை அறிந்து கொள்ளும் முயற்சியை பாதியில் கைவிட்டதாக ஆகிவிடும்.”

“அப்படியென்றால் நீங்கள் என்னதான் செய்கிறீர்கள்?”

“இந்த உலகத்தின் மூலத்தைத் தேடிப் பார்க்கிறேன். அதுவரை நான் சந்திக்கும் மனிதர்களுக்கு எல்லாம் சுதந்திரம் அடையும் வழியாக எனக்குத் தெரிந்ததை சொல்லித் தருகிறேன். ஒவ்வொரு மனிதனும் அவனுடன் பிறந்த எல்லாவிதமான அச்சங்களில் இருந்தும், உடம்போடு ஒட்டிப் பிறந்த கருத்துகளில் இருந்தும் விடுதலை பெறவேண்டும். இதுவரை உண்மை என்று நம்பிக் கொண்டிருந்த அத்தனை ஆதாரங்களையும் மறுபரிசீலனை செய்யும் துணிச்சல் வரவேண்டும்”

“இவற்றை வெளிப்படையாக மேடை போட்டு நீங்கள் பேசலாமே!”

“சொல்லப்பட்ட வார்த்தைகள் எல்லாமே தவறாக மாறிவிடும்...”

“புரியலையே சாமி”

“எழுதப்பட்ட வார்த்தைகள் ஒவ்வொரு நபருக்கும், ஒவ்வொரு அர்த்தம் தரக்கூடியவை. நான் சொல்லும் வார்த்தைகள் மிகச்சரியாக 100 சென்டிகிரேட் வெப்பத்தில் இருக்கிறது என்றால், அதை கேட்கும் உன்னால் கொஞ்சம் கூடுதலாகவோ அல்லது குறைவான வெப்பத்தில் மட்டுமே அதனை எடுத்துக் கொள்ள முடியும். அதனால்தான் இதுவரை இருந்த அத்தனை குருமார்களும் தோல்வியடைந்தார்கள்...”

“அப்படியானால் யாரும் யாருக்கும் எதுவும் சொல்லித்தரவே முடியாதா?”

“சொல்லித் தருவது அபாயகரமானது என்றால், அதை அப்படியே ஏற்றுக் கொள்வது அதைவிட அபாயகரமானது. வேதம் சொல்லியிருக்கிறது, குரு சொல்லி விட்டார் என்பதற்காக எதையும் அப்படியே பின்பற்றும் முட்டாள்தனத்தை மனிதர்கள் நிறுத்த வேண்டும். பழைய கடவுள்களுக்குப் பதிலாக புதிய கடவுள், பழைய சமயங் களுக்குப் பதிலாக புதிய சமயம், பழைய கட்டுப்பாடுகளுக்குப் பதிலாக புதிய தடைகள் என்று மாற்றவேண்டிய அவசியமும் இல்லை. சுதந்திரமடைதல் என்பதன் அர்த்தம் எந்த சுமையும் இல்லாமல், யாருடைய சார்பும் இல்லாமல் வாழ்க்கையை புரிந்து கொள்வது தான். ஒவ்வொருவர் சொன்ன வார்த்தை களையும் விதையாக மனதில் பதியவைத்து அதில் உருவாகும் இலை, காய், கனிகளில் உருவாகும் ருசியை அனுபவித்து தேவையானவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு தவறானவற்றை விலக்கும் தைரியம் இருத்தல் வேண்டும்...”

அமைதியாக என் பின்னே வந்துகொண்டிருந்த சங்கரன், “சாமி... கொஞ்சநேரம் உட்காருவோமா?” எனக் கேட்டார். கையை பிடித்து ஒரு மரத்தின் கீழே அமர வைத்தேன், என் கையை விடாமல் பிடித்துக் கொண்டிருந்தார்.

“நீங்க சொல்ற மாதிரி எல்லாத்தையும் தெரிஞ்சுக்கிட்டு என்ன செய்யப் போறோம் சாமி, எல்லாரும் சாகத்தானே போறோம். அரைகுறை அறிவோடு செத்துப் போனாத்தான் என்ன?”

“ஆஹா இதுதான் போராடத் தயங்கி செத்துப் போகும் பயந்த மனிதர்களின் மனநிலை சங்கரா. பெரும் துயரத்துடனும் நம்பிக்கை இல்லாத நிலையிலும்கூட, இந்த பழகிப் போன வாழ்க்கையை அப்படியே தொடரத் தயாராக இருக்கிறாய். ஆனால் வாழ்வின் உண்மையை அறிந்துகொள்ள தயங்குகிறாய்... அப்படித்தானே? வாழ்க்கை என்பது அன்றாடச் சித்ரவதையாக, அவமதிப்பாக, துயரமாக, குழப்பமாக இருப்பதற்குக் காரணமே வாழ்க்கையை மனிதன் புரிந்து கொண்டதில்லை என்பதுதான். மரணத்தில் இருக்கும் பயம்தான் மனிதர்களை இத்தனை குழப்பத்துக்கும் ஆட்படுத்துகிறது”

‘‘மரணத்தில் புரிந்து கொள்வதற்கு என்ன இருக்கிறது’’ என்று மிரட்சியுடன் கேட்டார் சங்கரன்.

‘‘வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்பதை அறிந்துகொண்டவனால், மரணத்தின் சிறப்பையும் உணர்ந்து கொள்ள முடியும். மரணம் என்பது முடிவல்ல, ஒரு ஓய்வுக்கான ஆரம்பம். நாம் நேசிக்கின்ற அனைத்தையும், மகிழ்ச்சியைக் கொடுக்கின்ற அனைத்தையும் துறந்து விடுதல்தான் மரணம். ஒவ்வொரு நிமிடமும் இறக்காமல் ஒருவரால் வாழவே முடியாது என்பதை புரிந்து கொண்டால் மரணம் பயம் தராது. இந்த உலகை அன்போடும், அழகோடும் பார்க்கும் ஒருவர் மரணத்தைப் பார்த்தும் அஞ்சமாட்டார். ஒரு பறவை முட்டையிட்டு குஞ்சு பொரித்ததும் கூட்டை மறந்துவிடுவது போன்று, வாழ்விற்கு இன்பம் தரும் இந்த உடலை எந்த கணத்திலும் மறந்துவிடத் தயாராக இருந்தால் மரணமானது இனிமையாகி விடும்.”

‘‘இறப்பு எப்போது வரும் என்பதை அறிந்துகொள்ள முடியுமா?”

“ஒவ்வொரு கணமும் இறந்து கொண்டிருக்கும் போது, எதற்காக நிரந்தர மரணத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்? இறப்பு எப்போதும் வீட்டு வாசலில் காத்துக் கொண்டுதான் இருக்கும்.

www.gyaanaguru.com

இறப்பு என்பது புனிதமானது, ஏனென்றால் அது எந்த மனிதனிடமும் ஏற்றத்தாழ்வு பாராட்டுவதில்லை. அதற்கு ஏழை, பணக்காரன், வலியவன், வறியவன், அரசியல்வாதி என பாகுபாடு கிடையாது. வாழ்வில் இல்லாத சமநிலையை மரணம் எல்லா மனிதர்களுக்கும் கொடுத்துவிடுகிறது. மரணம் பற்றிய பயம் இல்லாத காரணத்தால்தான் மிருகங்கள் மற்றும் பறவைகள் இயல்பாக எந்த மதத்தையும் பின் பற்றாமல் இருக்க முடிகிறது.”

“அப்படியானால் பறவைகளைப் போன்று வாழவேண்டும் என்கிறீர்களா?”

“பறவைகளைப்போல வாழ முடிகிறதோ இல்லையோ, பறவைகளைப் போன்று மரணமடையலாம். ஏனென்றால் எந்த பறவையும் எதிர்கால சந்ததிக்காக பாதையை விட்டுச் செல்வதில்லை. ஒவ்வொரு பறவையும் அதனதன் வழிகளில் மரணமடைகிறது. எந்தப் பறவையும் வாழ்ந்ததற்கு சுவடுகள் கிடையாது” என்று முடித்து கண்களை மூடினேன்.

மரணம் பற்றி பேசியதில் சங்கரன் நிலைகுலைந்து போயிருந்ததால், அதற்கு மேல் பேசவிரும்பாமல், “சங்கரா... நான் இங்கேயே படுத்து ஓய்வெடுத்தபின் மேலே நகர்கிறேன். நீ இப்போதே கீழே சென்றுவிடு, பெரிய மழை வரும் என நினைக்கிறேன்” என்று மரத்தின் வேரில் தலையை வைத்துப் படுத்தேன்.

“சாமி, எனக்கு இன்னும் குழப்பமா இருக்கே...”

“எல்லா குழப்பத்தையும் நீயேதான் தீர்த்துக் கொள். இன்னொருவரால் உன்னுடைய பசிக்கு சாப்பிட முடியாது”

“நானே எப்படி எல்லாவற்றையும் அறிந்து கொள்வது? ஏற்கெனவே நான் படித்தது, உங்களை மாதிரி ஆட்களிடம் கேட்டு அறிந்தது என எல்லாமே ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது”

“இதுதான் இறுதியான உண்மை என எதுவும் இல்லை என்றாலும், உன்னளவில் இதுதான் சரி என்று நீ முடிவெடுக்காத வரை குழப்பங்கள் இருந்துகொண்டேதான் இருக்கும். நிறைய அறிந்து கொள்ளவேண்டும் என நீ நினைத்தால், முதலில் எதுவுமே தெரியாது என்ற என்ற எளிமையான மனநிலையை வளர்த்துக் கொள்”

“அப்படி செஞ்சா நானும் உங்களை மாதிரி ஆகமுடியுமா?”

“என்னை மாதிரி என்றால்..?”



“நிறைய விஷயம் தெரிஞ்சுக்கிட்டு ஊர் ஊரா போய் பிரசங்கம் செய்யணும், எல்லோரும் என்கிட்ட கேள்வி கேட்கணும், எல்லாக் கேள்விகளுக்கும் நான் பதில் சொல்லணும்” என்று ஆசைகளைச் சொன்னார். “பிரசங்கம் செய்வதற்கும், கேள்விகளுக்கு பதில் சொல்வதற்கும் நீ பெரிதாக உழைக்க வேண்டியதோ அல்லது எதையும் அறிந்து கொள்ளவோ வேண்டியதில்லை. மனப்பாடமாக சில பாடல்களையும், மேற்கோள்களையும் நெஞ்சில் நிறுத்திக் கொண்டால் சிறந்த பிரசங்கியாகி விடலாம். கேள்விகளுக்கு பதில் சொல்வது இன்னும் எளிது, ஏனென்றால் எல்லோருமே அவர்களுக்கு சாதகமான பதிலை மட்டுமே எதிர்பார்ப்பார்கள். அதை மட்டும் சுற்றிவளைத்து சுவாரஸ்யமாகச் சொன்னால் போதும். ஆனால் இதன்மூலம் என்ன சாதிக்கப் போகிறாய்?” என்றேன். “ஒண்ணும் புரியலை சாமி... இத்தனை வருடம் பூசாரியா இருந்து என்ன சாதிச்சுட்டேன். அடுத்தவங்களுக்கு உபயோகமா எதையாவது சொல்ல நினைக்கிறேன். அதான், உங்க சிஷ்யன்னு சொல்லிக்கிட்டா மரியாதையா இருக்கும்!”

“நீ ஏதாவது தப்பாகச் சொன்னால் கூட, பழியை என் மீது போட்டுக் கொள்ளலாம் என்று நினைக்கிறாய் அப்படித்தானே” என்று சிரித்ததும் கொஞ்சநேரம் பேசாமல் இருந்தார்.

“சாமி, நீங்க என்னய சீடனா ஏத்துக்காட்டி பரவாயில்லை. ஆனா நான் உங்களை குருவா ஏத்துக்கிட்டேன் அவ்வளவுதான். உங்களை மனசுல நினைச்சுக்கிட்டு நான் ஆசைப்பட்டதை செய்யப் போகிறேன். என்ன நடந்தாலும் பரவாயில்லை” என்று புறப்படத் தயாரானவர் அடுத்த கேள்வியை ஆர்வமாகக் கேட்டார்.

“சாமி... நவராத்திரி விரதம் இருந்தா முற்பிறவியிலும், இந்த பிறவியிலும் செய்த பாவமெல்லாம் தீர்ந்து போகும். சிவராத்திரிக்கு கண் விழிச்சா சொர்க்கம் கிடைக்கும். ஏகாதசி, பிரதோஷத்தில உபவாசம் இருந்தா புண்ணியம் கிடைக்கும், பாவமெல்லாம் பனியாக கரைஞ்சிரும்னு வேதம் சொல்லுதே... அப்படின்னா தினமும் சாமி கும்பிட வேண்டாமா?”

“தினமும் சாமியை கும்பிடுன்னு சொன்னா அலுப்பு தட்டிடும், அதனாலதான் ஏகாதசி, பிரதோஷம், கார்த்திகை, அமாவாசைன்னு எதையாவது காரணம் காட்டி, அன்னைக்கு வழிபாடு செஞ்சா கூடுதல் சிறப்புன்னு சொல்லி வைச்சாங்க. பொருளை விக்கிறதுக்காக தள்ளுபடி, இலவசப் பொருள்னு எதையாவது சொல்லி ஏமாத்துறது போல, இந்த பண்டிகைகள் எல்லாமே கோயில் வளர்ச்சிக்காக நடத்தப்படும் வியாபார தந்திரங்கள். எல்லா நாளும் விஷேசமானதுதான், ஆனா எந்த நாளுக்கும் தனிப்பட்ட சிறப்பு கிடையவே கிடையாது. சிவராத்திரியன்னிக்கு மட்டும் கண் முழிச்சா, அடுத்த ரெண்டு நாள் தூக்கத்திலும், விழிப்பிலும் சிக்கல் வருமே தவிர வேறு எதுவும் நடக்காது”

“அப்படின்னா நான் கோயில்ல பண்ற சிறப்பு பூஜையெல்லாம் ஏமாத்து வேலைன்னு சொல்றீங்களா?” சங்கரன் குரலில் லேசான கோபம் எட்டிப் பார்த்தது.

www.gyaanaguru.com






www.gyaanaguru.com

# ஞானகுரு இயக்கத்தில் இணையுங்கள்

## மகிழ்ச்சியாக மாறுங்கள்
## மகிழ்ச்சியைப் பரப்புங்கள்



## ஞானகுரு மகிழ்ச்சியாளர் சேர்க்கை ஆரம்பம்
## ஆயுள் சந்தா 1 லட்சம் ரூபாய்

மகிழ்ச்சியைப் பரப்பும் ஒரு புதிய மதம் ஞானகுரு.

ஆரோக்கிய உடல், நிம்மதியான மனம், போதுமான பணம் ஆகியவற்றுடன் ஆறுதலான உறவுகள் அமைவதே மனிதருக்கு மகிழ்ச்சி தருகிறது. இவற்றை ஒவ்வொரு நபரும் அடைவதற்கு வழிகாட்டும் வகையில் ஞானகுரு மகிழ்ச்சி, ஞானகுரு யாக்கை, ஞானகுரு தமிழ்லீடர் போன்ற மின்னிதழ்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஞானகுரு பதிப்பகத்திலிருந்து நம்பிக்கையூட்டும் நூல்கள் வெளியாவதுடன், அன்றாடம் புதிய செய்திகளுடன் ஞானகுரு இணையம் - ஞானகுரு (gyaanaguru.com) இயங்கி வருகிறது. இவை எல்லாமே நிறைய வாசகர்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காக கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. இந்த சேவையைத் தொடர்வதற்கும் மகிழ்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்லவும் ஞானகுரு மகிழ்ச்சியாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஞானகுரு இயக்கத்தில் சேர்வதற்கு வாழ்நாள் சந்தா என ரூபாய் 1 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நிறைய செல்வமும் பெரிய மனமும் உள்ளவர்கள் மட்டுமே இந்த இயக்கத்திற்கு செலவு செய்தால் போதும் என்பதற்காகவே இந்த தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மகிழ்ச்சியாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்போது நம்முடைய வாசகர்கள், ஞானகுரு ஆதரவாளர்கள் மற்றும் சமூகம் மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கும்.

ஞானகுரு மகிழ்ச்சியாளராக இணைபவருக்கு மதிப்பளிக்கும் வகையில் ஞானகுரு மின்னிதழ்களின் அச்சு இதழ் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும். ஞானகுரு பதிப்பக புத்தகங்களும் வெளியாகும் தருணங்களில் அனுப்பப்படும். அதோடு மனவளக் கலை பயிற்சியளித்து தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும். ஞானகுரு குடும்பத்தில் இணைவதற்கு அன்போடு அழைக்கிறோம்.

தொகை அனுப்ப வேண்டிய முகவரி: Gyanaguru Publication,
Union Bank of India, Current Account No. 548401010050639,
IFSC CODE : UBIN0554847, PAN : AKLPJ7628N

மேலும் தொடர்புக்கு : எஸ்.கே.முருகன் - 9840903586, 7299753999



# ஓஷோவின்

## வண்ண மலர்கள்



**பு**த்திசாலித்தனம் என்பது உலகின் எந்தப் பொருளாலும் உன் ஆசையை நிறைவேற்ற முடியாது என்பதை உணர்ந்து கொள்வதே

**ம**ரணத்தை நினைவில் வைத்திருப்பவரை வாழ்க்கை ஏமாற்றாது

**அ**ன்பு எந்த ரகசியத்தையும் தன்னுள் வைத்திருப்பதில்லை, அது அனைத்தையும் பகிர்ந்து கொள்ளவே விரும்புகிறது.

**உ**லகிலேயே நம்பவே முடியாதது மனம் தான். இன்று ஒன்றை தேடும், நாளை மற்றொன்றை தேடும். காலையில் ஒன்றுக்கும் மாலையில் மற்றொன்றுக்கும் ஆசை கொள்ளும். கடந்த கணத்தில் என்ன உணர்ந்ததோ, அதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்றை இப்போது உணரும்.

**ஆ**ணவம் என்பது காலம் முழுவதும் எதையாவது ஆசைப் பட்டு கொண்டே இருக்கும் பிச்சைக்காரன், அன்பென்பது தன்னிடம் உள்ள அனைத்தையும் வாரித் தரும் பேரரசன்.

**ம**னிதன் புரிந்து கொள்ள முடியாத வித்தியாசமான மிருகம், இறந்தவர்களைப் பற்றி பேசினால் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறான், உயிரோடு இருப்பவர்களை கொலை செய்ய ஆசைப்படுகிறான்.

**அ**ன்பு ஒரு ஒப்பந்தம் அல்ல. இலாப நஷ்ட கணக்கை அது பார்ப்பதில்லை. இந்த பொருளியல் பூமியில் பொருளியலை கடந்த ஒளிக்கதிர் தான் அன்பு. அதுதான் அதன் அழகு.

**நி**கழ்காலத்தில் மிக அருகிலேயே மகிழ்ச்சி இருக்கிறது. ஆனால் அதை மறந்து கடந்த காலம், எதிர்காலம் என மாறி மாறி மகிழ்ச்சியை தேடுகிறீர்கள், அது அப்படி கிடைப்பதற்கு வாய்ப்பில்லை

**உ**லகில் மணமானவர்கள் எல்லோருக்குமே ஓர் எண்ணம் உண்டு. வேறொருவரை மணந்திருந்தால் எல்லாம் சரியாக இருக்கும் என நம்புகின்றனர், ஆனால் ஜோடியை மாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தால் கூட 15 நாட்களில் அவர்களின் புதிய ஜோடியும் பழையது போலவே தோன்றும். இது எதிலும் நிறைவடையா மனதின் தன்மை.

**யா**ரும், யாருக்காகவும் படைக்கப்படவில்லை, ஒவ்வொருவரும் தனக்கென மட்டுமே படைக்கப் பட்டிருக்கிறார்கள்.

**கொ**ஞ்சம் அன்பு, கொஞ்சம் அக்கறை, கொஞ்சம் பகிர்ந்தளித்தல் ஆகியவை சேர்ந்ததே வாழ்க்கை. எனவே கிடைத்த இந்த நொடியை கவலைப்படுவதற்கு பயன்படுத்தாமல் வாழ்வதற்கு பயன்படுத்துங்கள்.

**யா**ரோ போல வாழ வேண்டும், யாரோ போல சம்பாதிக்க வேண்டும், யாரோ போல மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தை கைவிடுங்கள்; ஏனென்றால் நீங்கள் ஏற்கனவே ஒரு தலைசிறந்த படைப்பு. உங்களை மேம்படுத்த தேவையில்லை, அதை உணருங்கள் போதும்.

**யா**ராவது உங்களை நேசித்தால், அவர்களிடம் நன்றியுடன் இருங்கள், ஏதாவது எதிர்பார்த்துக் கொண்டிருக்காதீர்கள்.

**எ**ன் வாழ்க்கை கொண்டாட்டமானது, அதன் பின் விளைவுகளைப் பற்றி எனக்கு அக்கறையோ கவலையோ இல்லை, நான் கொண்டாடத் தான் இந்த பூமிக்கு வந்திருக்கிறேன். அப்படித்தான் வாழ்வேன்.

**ம**னிதன் மகிழ்ச்சியடையவும் கொண்டாடவும் தான் பூமிக்கு வந்திருக்கிறான், மகிழ்ச்சியை விட உயர்வானது என அவனிடம் வேறு எதுவுமே இல்லை.

**உ**லகில் மிக கவர்ச்சிகரமான விலை உயர்ந்த பொருட்களை கொடுத்தாலும் நீங்கள் நிறைவடைய போவதில்லை. மீண்டும் வேறு எதையாவது தேடுவீர்கள். அது உங்களுக்கு உள்ளேயே பொங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அறியாத வரை உங்களால் மகிழ்ச்சியாக வாழவே முடியாது


**பு**த்தர் மதத்தையோ, அறிவுரைகளையோ, சித்தாந்தங்களையோ தரவில்லை, அவை அடிமைத்தனத்தை உருவாக்கும் என்பதை நன்கு அறிந்திருந்தார், அவர் கொடுத்தது முழுமையான சுதந்திரம், யாராலும் உங்களிடமிருந்து பறிக்க முடியாத சுதந்திரம்.



www.gyaanaguru.com



# சின்ன கோட்டுக்கு அருகில் பெரிய கோடு



**எஸ்.கே.முருகன்,**
மனவள ஆலோசகர்.

கார்த்திகேயனும் அவரது மனைவி புஷ்பாவும் வந்து அமர்ந்தார்கள். இருவரது முகமும் கலங்கியிருந்ததால் யாருக்குப் பிரச்னை என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, அவர்களே சொல்லட்டும் என்று அமைதி காத்தேன்

புஷ்பா பேசத் தொடங்கினார். ”இவங்க அப்பா செத்ததும் சொத்துப் பிரச்னை வந்திச்சு. இவருடைய அண்ணன் கிட்டத்தட்ட எல்லா சொத்தையும் எடுத்துக்கிட்டார். நாங்க கோர்ட்டுக்குப் போனோம். போன மாசம் இவரோட அண்ணனுக்கு சாதகமா தீர்ப்பு வந்திச்சு. அதுல இருந்து ரொம்பவும் கோபமா இருக்கிறார். எதற்கெடுத்தாலும் எரிஞ்சு விழுறார். ஏற்கெனவே ரொம்பவும் செலவழிச்சுட்டோம், இவரு திரும்பவும் மேல் கோர்ட்டுக்குப் போய் சொத்தை வாங்கப்போறேன்னு நிக்கிறார். அவரோட அண்ணனை அடிக்கப்போறேன், கூலிப்படையை வைச்சுக் கொல்லப் போறேன்னு என்னென்னவோ பேசுறார்... ஏதாச்சும் தப்புத்தண்டா நடந்துடுமோன்னு பயமா இருக்கு” என்று மனைவி சொல்வதைக் கேட்டு அமைதியாகவே இருந்தார்.

நான் பேசிக்கொள்கிறேன் என்று அவரது மனைவியை வெளியே அனுப்பிவிட்டு கார்த்திகேயனிடம் பேசினேன்.

“என்ன வேலை பார்க்கிறீங்க..?”

“ஸ்கூல்ல டீச்சரா இருக்கிறேன்... குடும்ப சொத்து எவ்வளவு முக்கியம், அது எத்தனை பெருமைன்னு என் பொண்டாட்டிக்குப் புரிய மாட்டேங்குது. நீங்க ஆம்பிளைங்கிறதால உங்களுக்குப் புரியும். இன்னைக்குத் தேதிக்கு 75 லட்சம் ரூபாய் சும்மா வருமா... எனக்கு பாதிப் பங்கு இருக்குது. அதை ஏமாத்தி அண்ணன் வைச்சிருக்காரு...” என்றார்.

“ஏன், சமமா பங்கு பிரிக்கலை...”

‘’அப்பா ஒரு பலசரக்குக் கடை வைச்சிருந்தாரு. அண்ணனும் அப்பா கூடவே இருந்து கடையை பார்த்துக்கிட்டாரு. நான் படிச்சு வேலைக்கு வந்துட்டேன். ஒரு பெரிய வீடும் கடையும் இருக்குது. அது, எப்படியும் ஒன்றரை கோடிக்கு மேலே போகும். அண்ணன் எப்படியோ வீடு, கடைக்கு சொத்து வரி, கரண்ட் பில் எல்லாம் அவர் பெயருக்கு முந்தியே மாத்திக்கிட்டாரு. நான் பங்கு கேட்டதுக்கு, ”உன்னை படிக்க வைச்சாச்சு. நல்லா சம்பாதிக்கிறே. நானும் அப்பாவும் ராத்திரி பகலா கடையில இருந்து சம்பாதிச்சிருக்கோம். ஊருக்கு வெளியே நிலம் இருக்கு. எப்படியும் 20 லட்சம் போகும். அதை வேணும்னா வாங்கிக்கோ. இதுல இருந்து எதுவும் தரமுடியாதுன்னு சொல்லிட்டாரு. ஆளுங்களை வைச்சு நியாயம் பேசியும் அண்ணன் கட்டுப்படலை. இப்போ அவர் பக்கம் கேஸ் ஜெயிச்சிடுச்சு. ஆனாலும், நான் விடப் போறதில்லை, மேல் கோர்ட் போகப்போறேன்... இல்லைன்னா வெட்டிட்டு ஜெயிலுக்குப் போறேன்” என்றார்.

“இப்போ நீங்க சொந்த வீட்ல இருக்கீங்களா இல்லைன்னா...”

‘’அது சொந்த வீடுதான். நான் லோன் போட்டு வாங்குனது. அப்போ அப்பா ஒரு அஞ்சு லட்சம் ரூபா குடுத்தாரு, அதையெல்லாம் பெரிய ரூபாயின்னு பேசுறாரு அண்ணன். அவர் சும்மா இருந்தாலும் அவரோட பசங்க ரொம்பவும் துள்ளுறாங்க. எனக்கு ஒரே ஒரு பொண்ணு மட்டும் தான். எனக்கு பேசுறதுக்கு யாரும் இல்லை, அதான் எல்லோரும் என்னை ஏமாத்துறாங்க...” என்றார்.

”அம்மா என்ன செய்றாங்க...?”

‘’அம்மா அஞ்சு வருஷத்துக்கு முந்தியே தவறிட்டாங்க. வீடும் கடையும் ஒரே இடத்துல இருந்ததால அண்ணன் கூடவே அப்பா இருந்துட்டாரு. அதனால, அப்பாவுக்குத் தெரியாம வீட்டையும் கடையையும் அவர் பெயருக்கு மாத்தியிருக்கிறார்...”

நியாயமாக அப்பா சொத்தில் இருவருக்கும் பங்கு இருக்கிறது என்றாலும் அண்ணன் படிக்காமல் அதே கடையில் அப்பாவுக்கு உதவியாக இருந்ததால், அந்த வீட்டுக்கும் கடைக்கும் சொந்தம் கொண்டாடுகிறார். தம்பியை படிக்க வைத்துவிட்டதால் வீட்டிலும் கடையிலும் பங்கு தர வேண்டாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார். அவர் பக்கம் இருந்து பார்த்தால் அது நியாயமாகத் தெரியலாம். அதனால் 75 லட்சம் ரூபாய்க்குப் பதிலாக 20 லட்சம் ரூபாயைக் கொடுக்க முன்வந்திருக்கிறார். ஆனால், 50 லட்சத்துக்கும் மேல் விட்டுத்தர கார்த்திகேயன் தயாராக இல்லை. இப்போது நீதிமன்றமும் அண்ணனுக்கு சாதகமாக நடந்துகொண்டதால் தன்னுடைய கோபத்தை அடக்க முடியாத நிலைக்கு ஆளாகியிருக்கிறார் என்பது புரிந்தது.

“அப்பீலுக்குப் போனா ஜெயிக்க முடியும்னு நினைக்கிறீங்களா..?”

“நல்ல சீனியர் லாயர் வைச்சு வாதாடுனா ஜெயிக்க முடியும்னு எங்க வக்கீல் சொல்றார். ஆனால், இந்த கேஸ் முடியவே அஞ்சு வருஷமாச்சு. மேலே போனா எவ்வளவு நாள் ஆகும்னு தெரியலை. அதான் கையில அருவாளை எடுத்தாத்தான் நியாயம் கிடைக்கும்... நான் போனா மாட்டிக்குவேன், மாட்டிக்காத மாதிரி ஏதாச்சும் செய்யணும்” என்றார்.

“ஆசிரியரா இருக்கிறீர்கள்... மாணவர்களுக்கு உதாரணமாக இருக்க வேண்டாமா... இப்படி வன்முறையை கையில் எடுப்பதாகச் சொல்றீங்க,

எப்படியும் மாட்டிக்குவீங்கன்னு தெரியலையா....?"

"வேற என்ன செய்றது, எங்க அப்பா சம்பாதிச்ச சொத்து சார்... அப்பாவுக்கு என் மேல எவ்வளவு மரியாதை தெரியுமா சார். அவர் உசுரோட இருந்தா எல்லா சொத்தையும் எனக்கே குடுத்துருப்பார்" என்று அவர் கண்கள் உஷ்ணமானது.

"உங்க சொந்தக்காரங்க என்ன சொல்றாங்க...?"

''இரண்டு பக்கமும் பேசுறாங்க.... அனுசரிச்சுப் போன்னு சொல்றாங்க" என்றார்.

அப்பீலுக்குப் போனாலும் இவர் ஜெயிக்க முடியாது என்பதாலே வன்முறையை கையில் எடுத்து கூடுதலாக சொத்து கிடைக்குமா என்று பார்க்கிறார் என்பது புரிந்தது. ஆனால், சட்டத்துக்குப் புறம்பாக இவரும் குடும்பமும் சிக்கலில் மாட்டிக்கொள்வார். இவர் விட்டுக்கொடுப்பது மட்டுமே சரியான தீர்வு. ஆனால், ஏமாளி என்ற பட்டம் கிடைத்துவிடும் என்பதால் பிடிவாதமாக இருக்கிறார். சொத்தை விட நிம்மதியே முக்கியம் என்பதை நேரடியாக எடுத்துச் சொன்னால் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பதும் புரிந்தது. எனவே, வேறு வகையில் தான் இவருக்குப் புரிய வைக்க முயல வேண்டும் என்பது புரிந்தது.

''உங்க குடும்பத்துல எல்லோரும் எப்படி பழகுவீங்க..?"

''எங்க அப்பா சாகுற வரைக்கும் நல்லா இருந்தோம் சார். என்ன விசேஷம்னாலும் அண்ணன் வீட்டுக்குப் போவோம். நல்லா கவனிப்பாங்க. இப்பத்தான் அது எல்லாமே சொத்தை சீட்டிங் போடுறதுக்குப் போட்ட வேஷம்னு தெரியுது. சொத்து பிரச்னை ஆரம்பிச்சதுல இருந்து வீட்ல சண்டையும் சச்சரவுமாத்தான் இருக்குது. இந்த பிரச்னை முடிஞ்சாத்தான் நிம்மதி கிடைக்கும்..."

"உங்க மனைவிக்கும் உங்களுக்கும் வேற ஏதாச்சும் பிரச்னை இருக்குதா..?"

''அதெல்லாம் ஒண்ணும் கிடையாது சார். ரொம்பவும் நல்லவ. அவளால தான் பொறுமையா இருக்கேன், இல்லைன்னா என்னைக்கோ அருவாவை கையில் எடுத்திருப்பேன்" என்றார். ஏமாந்து போன வலியை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவரும் அவஸ்தைப்பட்டு மற்றவர் களையும் வருத்தப்பட வைக்கிறார் என்பது புரிந்தது. நேரடியாக இதை சொன்னால் புரிந்து கொள்ளவே மாட்டார். அதனால், அவருக்குத் தெரியாமல் என் செல்போனில் இருந்து நண்பருக்கு ஒரு மெசேஜ் மட்டும் அனுப்பினேன்.

சில நிமிடங்களில் போன் வந்தது. அந்த செல்போன் எண்ணைப் பார்த்ததும், ''ஸாரி மிஸ்டர் கார்த்திகேயன். வழக்கமா கவுன்சிலிங் நேரத்தில் யாருடைய போனையும் எடுக்க மாட்டேன். இது ரொம்ப நேரமாக நான் எதிர்பார்த்த போன். இதைப் பேசிக்கொள்ளவா?" என்றதும் கார்த்திகேயன் பதறிக்கொண்டு சம்மதம் கொடுத்தார்.

போனை எடுத்ததும், "இந்திராவுக்கு என்ன ஆச்சு..?" என்றேன். நான் அவ்வப்போது இப்படி மெசேஜ் செய்து, அவரை பேசச்சொல்வது வழக்கம் என்பதால் அவர் புரிந்துகொண்டு சமாளித்துப் பேசினார். நான் அவ்வப்போது, "அச்சச்சோ...", "அப்புறம்...", "அடக்கடவுளே... சரி, நைட் நேரில் வர்றேன்" என்று சில பரிதாபமான கமென்ட்ஸ் சொல்லி போனை கட் செய்து கொஞ்சநேரம் அமைதியாக இருந்தேன்.

''சார், பெரிய பிரச்னையா?'' என்று கார்த்திகேயன் கேட்டார்.

''ம்... உங்ககிட்டே சொல்றதுக்கு என்ன..? இந்திராங்கிறது என் சொந்தக்காரப் பொண்ணு.



www.gyaanaguru.com



## சின்ன கோட்டுக்கு அருகில் பெரிய கோடு

நாலு வருஷமா பிள்ளை இல்லாம டெஸ்ட் டியூப் பேபிக்குப் போனாங்க. வயித்துல இரட்டைக் குழந்தை உருவாகிடுச்சு. டெலிவரிக்கு ரெண்டு மாசம் இருக்குது. நேத்து ராத்திரி இந்திராவுக்கு வலிப்பு மாதிரி வந்திச்சுன்னு ஹாஸ்பிடல்ல சேர்த்தோம். இப்போ அவ நார்மலுக்கு வந்துட்டா. ஆனா, ரெண்டு குழந்தையையும் காப்பாத்த முடியலை. சிசேரியன் செஞ்சு எடுத்துட்டாங்க. இதுல கொடுமை என்னன்னா, அவளோட கர்ப்பப்பையையும் சேர்த்து எடுத்துட்டாங்க. இனிமே அவ குழந்தை பெற முடியாது. இதைக் கேட்டதும் இந்திராவோட அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்து, அவரும் இப்போ சீரியஸா இருக்கார்... 24 மணி நேரம் கழிச்சுத்தான் எதுவும் சொல்ல முடியுமாம்" என்றேன்.

நான் சொன்ன மாடுலேஷனில் பரிதாபப்பட்டு அதிர்ச்சி யானார் கார்த்திகேயன். "என்ன சார், இந்தக் குடும்பத்துக்கு இப்படி ஒரு சோதனையா வரணும்... எப்படித்தான் அந்தக் குடும்பம் இதையெல்லாம் தாங்குதோ?" என்றார்.

"ஆமாங்க, காசு பணம் போனாக் கூட சம்பாதிக்கலாம். யாருக்காவது ஏதாச்சும் ஆயிடுச்சுன்னா ஒட்டுமொத்த வாழ்க்கையும் போயிடும்... இதை விட மோசமான சூழ்நிலையில் நிறைய பேர் வாழ்ந்துக்கிட்டு இருக்காங்க சார்... நைட்டு போய் அந்தப் பொண்ணைப் பார்த்து ஆறுதல் சொல்லணும்... இதுல இன்னொரு விஷயம் இருக்குது. செத்துப்போன இந்திராவோட அப்பாவுக்கும் அவரது அண்ணனுக்கும் சொத்து கேஸ் ஒண்ணு நடந்துக்கிட்டு இருக்குது, அது இனி என்ன ஆகும்னு தெரியலை... ' என்று சொல்லிவிட்டு அமைதி காத்தேன்.

அவர் என்ன பதில் சொல்வது என்று புரியாமல் அமைதி காத்தார். அவர் யோசனை செய்வதும் குழப்பமாவதும் புரிந்ததும் மீண்டும் பேசத் தொடங்கினேன்.

"ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு வழியில் கஷ்டப்படுறாங்க. அதை விடுங்க. உங்க அண்ணனை இங்கே கூப்பிட்டு வர முடியுமா? நான் பேசிப் பார்க்கிறேன். அவர் குடியிருக்கிற வீடுங்கிறதால அதை கண்டிப்பா தர மாட்டார். ஆனா, வேற என்ன வழின்னு பேசுவோம்" என்றேன்.

கொஞ்ச நேரம் யோசித்தார்.

"சார், பணம் ரொம்பவும் முக்கியம். ஆனா, அது மட்டும் வாழ்க்கை இல்லை. உங்களுக்கு குடும்ப வாழ்க்கை முக்கியமா இல்லைன்னா சொத்து முக்கியமான்னு யோசிச்சு காரியத்தில் இறங்குங்க. ஏன்னா ரொம்பவும் கோபப்பட்டா உடம்புக்குச் சிக்கலாயிடும். யாருக்கு எப்ப என்ன ஆகும்னு சொல்ல முடியாது... நீங்க கூலிப்படை பத்தி யார்கிட்டேயும் தயவுசெஞ்சு பேசாதீங்க. உங்க அண்ணன் ரோட்ல போய் யார் மேலயாவது சாதாரணமா மோதுனா கூட, நீங்க ஏற்பாடு செஞ்ச ஆளுன்னு நினைச்சு கேஸ் கொடுத்துடுவார். அப்புறம் ஜெயிலுக்குப் போயிட்டீங்கன்னா உங்க பொண்ணு வாழ்க்கையும் பாழாப் போயிடும்... வேலை போயிடும்..." என்றேன்.

முகத்தில் பயம் தெரிந்தது. மெதுவாகப் பேசினார். "கோபத்துல பேசுறேன், ஆனா அப்படி செய்ய மாட்டேன்.."

"சூழ்நிலை அப்படியெல்லாம் பார்க்காது கார்த்திகேயன். உங்க அண்ணன் நினைக்கிறாரோ இல்லையோ, உங்க மனைவி கூட அப்படி நினைக்கலாம்... அவருக்குத் தெரியாம ஆள் ஏற்பாடு செஞ்சதா சந்தேகப்படலாம்... அதனால், இந்த பிரச்னைக்கு ஒரு முடிவு கட்டுறது நல்லது..." என்றேன்.

"அண்ணன் நான் கூப்பிட்டா வருவாரான்னு தெரியலை. எங்க மாமா தான் மத்தியஸ்தம் பேசிக்கிட்டு இருக்கார். அவர்கிட்டே பேசிப் பார்க்கிறேன்..." என்றார்.

"அண்ணன் வராட்டியும் பரவாயில்லை. நீங்க நாளைக்கு வாங்க. இன்னும் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு..." என்று அனுப்பி வைத்தேன்.

அவரது சின்ன சிக்கலுக்குப் பக்கத்தில் ஒரு மிகப்பெரிய சிக்கல் வரப்போவதை உணர்த்தும் இரு கோடுகள் தத்துவத்தைப் பயன்படுத்தினேன். அவரை விட அதிகமான சோகத்துடன், வேதனை யுடன் நிறைய பேர் வாழ்கிறார்கள் என்பதையும் மறைமுகமாக சுட்டிக் காட்டியிருந்தேன். அடுத்த நாளே அதற்கான பலன் தெரிந்தது.

''மாமாகிட்டே பேசினேன். எதுக்கு வீணா அப்பீலுக்கு அலையப் போறே... நான் பார்த்துப் பேசி கூடுதலா பணம் வாங்கித்தர்றேன். சொந்தம் விட்டுப் போகக்கூடாதுன்னு சொன்னார். விட்டுக் கொடுத்தா கெட்டுப் போக மாட்டாங்கன்னு சொன்னார்... எங்க அம்மாவும் அப்படித்தான் சொல்வாங்க.... அதனால நானும் பேசச் சொல்லிட்டேன். தோத்துப் போனதால பேச வர்றேன்னு நினைப்பாங்க. நினைச்சா நினைச்சுட்டுப் போகட்டும்" என்றவர் மறக்காமல், "இந்திராவோட அப்பா நல்லா இருக்கிறாரா?" என்று ஆர்வமாகக் கேட்டார்.

"ஆமா, சார் நல்லாயிட்டார்... ரெண்டு பிளாக் இருக்குது, ஸ்டண்ட் வைச்சா போதும்னு சொல்லிட்டாங்க. சீக்கிரம் வீட்டுக்குத் திரும்பிடுவார்" என்று அனுப்பிவைத்தேன்.

www.gyaanaguru.com

# ஞானகுரு மகிழ்ச்சி

## பொக்கிஷ இதழ்கள் படிக்க விரும்புகிறீர்களா..?










## 25 மின்னிதழ்கள்
## 500 ரூபாய் மட்டுமே.

+91 72997 53999 எண்ணுக்கு 500 ரூபாய் அனுப்பிவையுங்கள்.
உங்கள் மெயிலுக்கு இதழ்கள் அனுப்பப்படும்.

www.gyaanaguru.com